விலை: 30.00
பக்கங்கள் : இருபது
Viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 தை 20 செவ்வாய்க்கிழமை (02.02.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 045

## யாழ்.பல்கலைக்கழக 5 மாணவர்கள் உட்பட
### 7 பேருக்கு வடக்கில் கொரோனா


(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் நேற்றுத் திங்கட்கிழமை 373 பேருக்கான கொரோனாத் தொற்றுப் பரிசோதனைகள் செய்யப்பட்டுள்ளதாகவும், அவர்களில் 19

### வேலணை பிரதேச செயலாளராகவிருந்த
## சோதிநாதனின் இடமாற்றத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து
### வேலணையிலும் யாழிலும் போராட்டம்

(யாழ்ப்பாணம்)
வேலணை பிரதேச செயலாளராகவிருந்த எஸ்.சோதிநாதனின் இடமாற்றத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து தீவகப் பிரதேச பொது 19

### அரசின் திட்டமிட்ட ஆக்கிரமிப்புக்கு எதிராக
# வட - கிழக்கில் நாளை முதல் அஹிம்சைப் போராட்டம்
## தமிழ்த் தேசிய கட்சிகள், மத அமைப்புகள், பொது அமைப்புகள் முழுமையான ஆதரவு

*(யாழ்ப்பாணம்)*
அரசின் திட்டமிட்ட ஆக்கிரமிப்புக்கு எதிராக வடக்கு - கிழக்கில் நாளை முதல் அஹிம்சைப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.
குறித்த போராட்டத்துக்கு தமிழ்த் தேசிய கட்சிகள், மத அமைப்புகள், பொது அமைப்புகள் தமது முழுமையான ஆதரவை தெரிவித்துள்ளன.
*(19ஆம் பக்கம் பார்க்க)*



## தயக்கமின்றி தடுப்பூசியை போடுங்கள்
### சத்தியமூர்த்தி வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)
தடுப்பூசி போட்டு இரண்டு நாட்கள் 19

## வடக்கில் 7,221 பேருக்கு தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன

(யாழ்ப்பாணம்)
வடக்கு மாகாண வைத்தியசாலைகள்ஊடாக மருத்துவ சேவை 19

## கொரோனா தடுப்பூசியால் பக்கவிளைவுகள் ஏற்படவில்லை
### சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டு

(கொழும்பு)
கொரோனா தடுப்பூசியினால் பாரியளவு பக்க விளைவுகள் எதுவும் இதுவரையில் பதிவாகவில்லை என சுகாதார அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது.
நேற்றைய தினம் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர சந்திப்பில் கலந்து 19

### பாடசாலை மாணவர்களுக்கும்
## அன்டிஜன் பரிசோதனை
### கல்வி அமைச்சர் பீரிஸ்

(கொழும்பு)
இலங்கையில் உள்ள சகல பாடசாலைகளிலும் மாணவர்களுக்கு அன்டிஜன் பரிசோதனை நடத்த தீர்மானித்துள்ளதாக கல்வியமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கூறியுள்ளார்.
பாடசாலை மாண 19



### ஐ.நா விவகாரத்தை
## அரசியலாக்காது பொறுப்புணர்வுடன் கையாளுங்கள்
### ரணில் தெரிவிப்பு

12ஆம் பக்கம் பார்க்க

## கொரோனாவால் மேலும் 7 பேர் பேலி

(கொழும்பு)
இலங்கையில் கொரோனாத் தொற்றினால் பாதிக்கப்பட்ட மேலும் ஏழு பேர் நேற்று உயிரிழந்துள்ளதாக சுகாதாரத் திணைக்களம் 19

### சுதந்திர தின நிகழ்வில்



## சிங்கள மொழியில் மட்டுமே தேசிய கீதம் இசைக்கப்படும்
### பாதுகாப்பு செயலாளர் கமால் குணரட்ன

05ஆம் பக்கம் பார்க்க

## கிழக்கு முனையம் இலங்கையுடையதே
### துறைமுக அமைச்சர் ரோஹித



(கொழும்பு)
கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தின் நடவடிக்கையை 100 வீதம் இலங்கை துறைமுக அதிகார சபையின் 19

## கிழக்கு முனையம் இந்தியாவுக்கு தேவை
### கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம்

(கொழும்பு)
2019ஆம் ஆண்டு மே மாதம் இலங்கை, இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு இடையில் கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு 19

## எரிவாயு விலையை அதிகரிக்க தீர்மானம்

(கொழும்பு)
இலங்கையில் 19

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சேவைநலன் பாராட்டு

24 வருடகாலமாக எமது பிரதேச சபையில்
அளப்பரிய சேவையாற்றி
ஓய்வுபெற்றுச் சென்ற



திரு. து. புஸ்பராசா

திரு. மா. கிருஸ்ணசாமி

அவர்களது ஓய்வுகாலம் சிறப்புற
எமது வாழ்த்துகளைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்.

(5497)

ஊழியர் நலன்புரிச் சங்கம்
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.

---

**இந்து பௌத்த கலாசார பேரவையால் வடக்கு மாகாணத்தில் நடாத்தப்படும் 2ஆம் மொழி கற்கை நெறியானது அரச பாடசாலைகளில் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (31.01.2021)**

இக்கற்கை நெறியானது முற்றிலும் மாணவர்களுக்கு இலவசமாக கற்பிக்கப்படுகின்றது. இக்கற்கை நெறியானது மாணவர்கள், அரச உத்தியோகத்தரகள், இளைஞர், யுவதிகள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் அங்கத்தவராக சேர்ந்தால் ஆறு மாத காலம் கற்பித்தல் இலவசமாகும்.

கீழ்க் காணும் பாடசாலையில் சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 9.00 மணியில் இருந்து வகுப்புக்கள் நடைபெறுகின்றன. மேலும் விபரங்கள், விண்ணப்படிவங்களை பெற்றுக்கொள்ள இந்து பௌத்த கலாசார பேரவையின் இணைப்பாளர்களுடன் தொடர்பு கொள்ளவும்.

**வடக்கு மாகாணத்தில் வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன!**

- யா / கொக்குவில் இந்துக் கல்லூரி - 076 879 7560
- யா / மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி - 077 692 5609
- யா / கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி 074 170 8970
- யா / புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி 074 161 8258
- யா / நெல்லியடி மத்திய கல்லூரி - 076 989 6130
- யா / சுழிபுரம் விக்டோரியா கல்லூரி - 077 830 6336
- யா / வட்டுக்கோட்டை சரஸ்வதி மகா வித்தியாலயம் - 077 692 5609
- யா / சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலயம் - 077 844 6094
- யா / சாவகச்சேரி றிபேக் கல்லூரி - 076 670 4258
- யா / உடுத்துறை மகா வித்தியாலயம் - 074 163 4306

(C-1326)

**மேலதிக தகவல்களுக்கு -**

1. பருத்தித்துறை வீதி, புதிய உயர்கலைக் கல்லூரி, ஆரியகுளம், யாழ்ப்பாணம். 021 223 2072 - 077 271 1181
2. No. 144/3, முல்லைத்தீவு வீதி, பரந்தன் : 074 074 0323
3. நெடுங்கேணி வீதி, கனுக்கேணி மேற்கு, முள்ளியவளை, முல்லைத்தீவு. 074 151 9139



வடக்கு மாகாணத்தில் சகல பாடசாலையிலும் வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இரண்டாம் மொழி கற்கை நெறிக்காக M.T.S இராமச்சந்திரன் அவர்கள் அனைத்து பாடசாலைகளுக்கும் அனுசரணை வழங்குகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.


---

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்

## நாகலிங்கம் பூவையா

**தோற்றம் – 1938.10.19** **மறைவு – 2021.01.05**



கடந்த 05.01.2021 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (02.02.2021) செவ்வாய்க்கிழமை வில்லூண்டி புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை மறுதினம் (04.02.2021) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறுவதுடன் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மரணச்செய்தி கேட்டு ஓடோடி வந்து எமக்கு பல்வேறு வகைகளில் ஒத்துழைப்பு நல்கிய அன்புள்ளங்களுக்கும் இறுதிக் கிரியைகளில் பங்குபற்றிய உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் மற்றும் உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் இருந்தும் தொலைபேசி மூலமாகவும் பதாதைகள், சமூக வலைத்தளங்களிலும் பத்திரிகைகளிலும் கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டும் மலர்வளையங்கள் சாத்தியும் இரங்கல் தெரிவித்த அனைவருக்கும் எமது குடும்பத்தார் சார்பில் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இல. 236/3, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(5495)

# தடுப்பூசி செலுத்திய பின்பு இலேசான காய்ச்சல் இருக்கும்

# பயம் கொள்ளத் தேவையில்லை என்கிறார் மருத்துவர் யமுனாநந்தா



(யாழ்ப்பாணம்)

**தற்போது வழங்கப்படும் கொரோனாத் தடுப்பூசியை அனைவரும் பெற்றுக்கொள்ள முன்வருவதுடன் தடுப்பூசி செலுத்திய பின் இரண்டு, மூன்று நாட்கள் வரை மாமிச உணவுகளைத் தவிர்ப்பது நல்லது என யாழ். போதனா மருத்துவமனைப் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் யமுனாநந்தா தெரிவித்தார்.**

நேற்றையதினம் வலம்புரிக்கு தடுப்பூசி தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஒரு வருடமாக தயாரிக்கப்பட்ட மிகவும் நம்பகத் தன்மையான அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசியானது அவசரகால பயன்பாட்டிற்காக நாட்டில் தற்போது செலுத்தப்பட்டு வருகின்றது. சமூகத்தில் அதிகம் தொற்றுப் பரவல் இருக்கும் இடங்களில் பணிபுரிவோர் இந்தத் தடுப்பு மருந்தைக் கட்டாயம் போட்டுக்கொள்ள வேண்டும்.

ஆஸ்துமா நோயுடையவர்கள், சுவாச அலற்சியுடையவர்களுக்கும் இந்தத் தடுப்பூசி போடப்பட வேண்டும்.

இந்தத் தடுப்பு மருந்து போடும் போது ஒவ்வாமை ஏற்படுத்தும் உணவுகளை உண்ணக்கூடாது.

இறைச்சி வகைகள், மீன், மாமிச உணவுகளை தடுப்பூசி போட்டு இரண்டு, மூன்று நாட்களுக்கு உட்கொள்வதைத் தவிர்ப்பது நல்லது. கடினமான வேலை செய்து விட்டு தடுப்பூசி போடக் கூடாது. ஓய்விலிருத்தல் நல்லது.

குறிப்பாக தடுப்பூசி போடுபவர்கள் உணவகங்களில் உணவுகளை உண்ணாமல் வீடுகளில் உணவருந்துவது நல்லது.

தடுப்பூசி போட்டபின்னர் காய்ச்சல் ஏதேனும் ஏற்பட்டால் பயம்கொள்ளத் தேவையில்லை. போட்டுக் கொண்ட தடுப்பூசி உடலில் செயற்படத் தொடங்குகின்ற சந்தர்ப்பத்தில் ஏற்படுகின்ற தாக்கம்தான் காய்ச்சல். உடல் களைப்பாக இருக்கும். ஒவ்வாத தன்மையுள்ளவர்கள் தடுப்பூசி போடுவதற்கு முன்னர் மருத்துவருக்கு தெரியப்படுத்துவது நன்று.

குறிப்பாக எச்.ஐ.வி, புற்று நோய் போன்ற நோயுடையவர்கள் மருத்துவரின் அறிவுறுத்தலுக்கமைய தடுப்பூசி செலுத்திக் கொள்ள வேண்டும்.

மேலும் தடுப்பூசியானது போட்டு சிறிது காலத்தின் பின்பே அதற்கான பூரண நோயெதிர்ப்பு சக்தி உடலில் தோற்றுவிக்கப்படும். ஆகவே தடுப்பூசி போட்டபின்னரும் பொதுமக்கள் தொடர்ந்து சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். அலட்சியப் போக்கைத் தவிர்க்கவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-4-5)

# நிரந்தர நியமனம் கோரி

## தொண்டர் ஆசிரியர்கள் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்திலுள்ள அதிகஷ்ட பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளில் கல்வி கற்பிக்கின்ற தொண்டர் ஆசிரியர்கள் தமக்கான நிரந்தர நியமனத்தை கோரி நேற்று வடமாகாண ஆளுநர் செயலகம் முன்பாக அமைதி முறையிலான போராட்டம் ஒன்றினை நடத்தினர்.

குறித்த போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவிக்கையில், நாங்கள் வடக்கு மாகாணத்தில் ஐந்து தொடக்கம் பத்து வருடங்களாக அதிகஷ்ட பிரதேசங்களில் தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றி வருகின்றோம்.

இருப்பினும் எமக்கான நிரந்தர நியமனங்கள் இது வரை வழங்கப்படவில்லை.

இதற்கு முன்னர் தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றிய பலருக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதன் அடிப்படையில் தான் நாங்கள் இவ்வளவு காலமும் கடமையாற்றி வருகின்றோம்.

நாம் யுத்தத்திற்கு பிற்பட்ட காலப்பகுதியில் எந்த விதமான வேதனமும் வழங்கப்படாத நிலையிலேயே கடமையாற்றி வருகின்றோம்.

எமக்கு எந்தவிதமான கொடுப்பனவுகளும் இல்லாமல் சேவையாற்றி வருவதனால் நாம் பல பொருளாதார பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

எமது நிரந்தர நியமனத்துக்கான நேர்முகத் தேர்வு திகதி அறிவிக்கப்படும் வரை நாங்கள் இந்தப் போராட்டத்தினை முன்னெடுத்துச் செல்லவுள்ளோம்.

எனவே எமது நிலையைக் கருத்தில் கொண்டு எமக்கு ஆக்கபூர்வமான ஒரு முடிவினை வழங்க வேண்டும் எனத் தெரிவித்தனர். (நி-104)

# சிவில் அமைப்புக்களின் போராட்டத்திற்கு ரெலோ பூரண ஆதரவு வழங்கும்

## வலி.கிழக்கு பிரதேசபைத் தவிசாளர்

(யாழ்ப்பாணம்)

பொத்துவிலில் தொடங்கி பொலிகண்டி வரை நடைபெறவுள்ள வடக்கு-கிழக்கு சிவில் அமைப்புக்களின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள தமிழின ஒடுக்குமுறைக்கு எதிரான ஜனநாயகப் போராட்டத்திற்கு தமிழ் ஈழ விடுதலை இயக்கம்(ரெலோ) தமது முழுமையான பூரண ஆதரவை வழங்குகிறது என வலி.கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தி.நிரோஷ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களின் இன விடுதலைக்காக தொடர்ச்சியாக ஜனநாயக முறையில் போராடி வரும் எமது கட்சி அண்மைக் காலங்களில் கூர்மையடைந்துள்ள தமிழின அழிப்பை தடுத்து நிறுத்த பல இடங்களிலும் களத்தில் நின்று குரல் கொடுப்பதுடன் சர்வதேச ரீதியாகவும் இலங்கை அரசாங்கத்தின் அட்டூழியங்களை மனித உரிமைகள் சார்பான அமைப்புக்களுக்கும் மனிதவுரிமைகளை பாதுகாக்கும் நாடுகளுக்கும் அறிக்கை இட்டு அழுத்தங்களை இயன்ற வரை பிரயோகித்து வருகின்றோம்.

இச் செயற்பாடு தமிழர் தாயகப் பகுதியின் எட்டு மாவட்டங்களிலும் தொடர்ந்து எம்மால் முன்னெடு க்கப்பட்டு வருகின்றது.

இதன் தொடர்ச்சியாக வட கிழக்கு இணைந்த ஒரு ஜனநாயகப் போராட்டத்தை சிவில் அமைப்புக்கள் ஏற்பாடு செய்துள்ளமையை நாம் வரவேற்கின்றோம். அதுமட்டுமல்ல எமது பூரண ஆதரவையும் தெரிவிக்கின்றோம் .

அத்துடன் இந்த ஜனநாயகப் போராட்டத்தில் தமிழர் தாயகத்தில் உள்ள அனைத்து தமிழ்த் தேசியம் சார்ந்த அமைப்புக்களையும் தமிழ் பேசும் முஸ்லிம் அமைப்புக்களையும் ஆதரவு வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (5-4)

# இ.போ.ச ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பு அமைச்சரின் தலையீட்டை அடுத்து முடிவுக்கு வந்தது



(யாழ்ப்பாணம்)

இலங்கை போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய பிரதான முகாமையாளராக நியமிக்கப்பட்ட செல்லத்துரை குலபாலச்செல்வனின் நியமனத்தை இடைநிறுத்தியதற்கு எதிராக நேற்று பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை இலங்கை போக்குவரத்துசபை ஊழியர்கள் முன்னெடுத்தனர்.

இ.போ.ச. வடபிராந்திய முகாமையாளராக நியமனம் வழங்கப்பட்ட குலபாலச்செல்வனின் நியமனம் தொடர்பில் ஏற்பட்ட சர்ச்சைக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சிகளை அடுத்து சுமுகமான தீர்வு கிடைக்குமென போராட்டத்தை முன்னெடுத்த போக்குவரத்து சங்க ஊழியர்கள் மத்தியில் அமைச்சரது பிரதிநிதியாக கலந்து கொண்ட கந்தசாமி கமலேந்திரன் மற்றும் வேலும் மயிலும் குகேந்திரன் ஆகியோர் உறுதியளித்துள்ளதை அடுத்து முன்னெடுத்த பணிப்பகிஷ்கரிப்பு போராட்டமும் நிறைவுக்கு கொண்டுவரப்பட்டது. (5-4-33)

# சென்னை இந்தியாவின் அன்னை

## இந்திய – இங்கிலாந்து மோதல் எப்படி?

டெஸ்ட் வரலாற்றில் இந்திய அணிக்கு முதல் வெற்றி தந்த இடம் சென்னை. இங்கு இந்திய அணி இங்கிலாந்தை இன்னிங்ஸ், 8 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

இந்திய அணி டெஸ்ட் அரங்கில் முதன் முறையாக 1932ல் இங்கிலாந்துக்கு எதிரான லோர்ட்ஸ் டெஸ்டில் கால் பதித்தது. இதில் இந்தியா 158 ஓட்டங்களில் தோற்றது.

பின் இந்தியா பங்கேற்ற எந்த டெஸ்டிலும் வெற்றி பெறவில்லை. இந்திய அணியின் முதல் 24 டெஸ்டில் 12 சென்னை, சேப்பாக்கம் மைதானத்தில் தனது 25ஆவது டெஸ்டில் களமிறங்கியது இந்தியா.

முதல் இன்னிங்சில் இங்கிலாந்து 266 ஓட்டங்கள் எடுக்க, இந்தியா 457/9 ஓட்டங்கள் எடுத்து 'டிக்ளேர்' செய்தது. பங்கஜ் ராய் (111) பாலி உம்ரிகர் (130) சதம் அடித்தனர். இரண்டாவது இன்னிங்சில் இங்கிலாந்து அணி 183 ஓட்டங்களுக்கு சுருண்டது. இந்தியா இன்னிங்ஸ், 8 ஓட்டங்கள் வித்தியாசத்தில், டெஸ்ட் அரங்கில் முதல் வெற்றியை பதிவு செய்தது.

**முதல் 'டை'**

இந்திய அணி இதுவரை 546 டெஸ்டில் பங்கேற்றது. இதில் 1986ல் சென்னையில் நடந்த இந்தியா, அவுஸ்திரேலியா மோதிய போட்டி சமனானது. முதல் இன்னிங்சில் அவுஸ்திரேலியா 574/7, இந்தியா 397 ஓட்டங்கள் எடுத்தன. இரண்டாவது இன்னிங்சில் அவுஸ்திரேலியா 170/5 ஓட்டங்கள் எடுத்தது. 348 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என களமிறங்கிய இந்தியா, இரண்டாவது இன்னிங்ஸில் 347 ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்க போட்டி 'சமன்' ஆனது.



**யார் ஆதிக்கம்?**

இரு அணிகள் 122 டெஸ்டில் மோதின. இந்தியா 26, இங்கிலாந்து 47ல் வென்றன. 49 போட்டிகள் 'டிரா' ஆகின.

- இந்திய மண்ணில் இங்கிலாந்து 60 டெஸ்டில் பங்கேற்றது. இதில் இந்தியா 19, இங்கிலாந்து 13ல் வென்றன. 28 டெஸ்ட் 'சமன்' ஆகின.

**சிறந்த 'சேஸ்'**

2008 மும்பை, பயங்கரவாத தாக்குதலுக்குப் பின் சென்னையில் டெஸ்ட் நடந்தது. முதல் இன்னிங்சில் இங்கிலாந்து 316, இந்தியா 241 ஓட்டங்கள் எடுத்தன.

இரண்டாவது இன்னிங்சில் இங்கிலாந்து 311/9 ஓட்டங்கள் எடுத்தது. இந்தியா 387 ஓட்டங்கள் எடுக்க வேண்டிய கட்டாயத்தில் களமிறங்கியது. கடைசி நாளில் சச்சின் (103), யுவராஜ் சிங் (85) இணைந்து அசத்த, இந்தியா வரலாற்று சிறப்பு மிக்க வெற்றி பெற்றது.

# இந்தியாவுக்கே தொடரை வெல்ல வாய்ப்பு ஆஸியின் இயன் சப்பல் கணிப்பு




"டெஸ்ட் தொடரில் கிண்ணம் வெல்லும் வாய்ப்பு இங்கிலாந்தை விட இந்திய அணிக்கு அதிகம் உள்ளது" என இயன் சப்பல் தெரிவித்துள்ளார்.

இந்தியா சென்றுள்ள இங்கிலாந்து அணி, 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

முதலிரண்டு போட்டிகள் வரும் பெப். 5, பெப். 13ல் சென்னை, சேப்பாக்கம் மைதானத்தில் நடக்கின்றன. கடைசி இரு டெஸ்ட் போட்டி கள் (பிப். 24-28, மார்ச் 4-8) அகமதாபாத்தில் நடக்கின்றன.

இத்தொடரில் கிண்ணம் வெல்லும் வாய்ப்பு எந்த அணிக்கு அதிகம் உள்ளது என்பது குறித்து அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் அணித் தலைவர் இயன் சப்பல் கூறியது.

பல்வேறு தடைகளை தாண்டி அஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை கைப்பற்றிய இந்திய அணிக்கு கிண்ணம் வெல்லும் வாய்ப்பு அதிகம் இருப்பதாக கருதுகிறேன்.

ஏனெனில் அணித் தலைவர் விராட் ஹோலியின் வருகையால் இந்திய அணியின் 'துடுப்பாட்ட' வரிசை, குண்டு துளைக் காத ஆடை அணிந்து கொண்டது போல பலமானது.

தவிர, அஷ்வின், ஹர்திக் பாண்ட்யா, இஷாந்த் சர்மா போன்ற அனுபவ வீரர்கள் அணியில் இணைவதால் தோற்கடிக்க முடியாத தோற்றத்தை பெறுகிறது.

இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடரை வென்ற உற்சாகத்தில் உள்ள இங்கிலாந்து அணிக்கு அணித் தலைவர் ஜோ ரூட் நம்பிக்கை தருகி றார்.

'முன்வரிசை துடுப்பாட்டத்தில்' இந்தியாவின் கை ஓங்குகிறது. சுப்மன் கில், ரோகித் சர்மா, புஜாரா நம்பிக்கை அளிக்கின்றனர். இங்கிலாந்து அணிக்கு டொம் சிப்லே, ரோரி பேர்ன்ஸ், ஜாக் கிராலே சோபிக் காத பட்சத்தில் அணித் தலைவர் ஜோ ரூட் நெருக்கடியைச் சந்திக்க நேரிடும்.

இரு அணிகளின் 'நடுத்தர வரிசை துடுப்பாட்டம்' சமபலபத்துடன் உள்ளது. இந்திய அணிக்கு அஜின்கியா ரகானே, ரிஷாப் பன்ட், ஹர்திக் பாண்ட்யா கைகொடுக்கின்றனர்.

இதேபோல இங்கிலாந்து அணிக்கு, பென் ஸ்ரோக்ஸ், ஜோஸ் பட்லர், போப் நம்பிக்கை அளிக்கின்றனர்.

இரு அணிகளின் வேகப்பந்து வீச்சில் பெரிய அளவில் வித்தியாசம் இல்லை. இங்கிலாந்து அணியில் அனுபவ அண்டர்சன், ஸ்ரூவேர்ட் பிரோட் ஆகியோருடன் ஜோப்ரா ஆர்ச்சர் இணைவது பலம்.

இதேபோல இந்திய அணியின் வேகப்பந்துவீச்சும் சிறப்பாகவே உள்ளது. சமீபத்திய அவுஸ்திரேலிய தொடரில் இளம் 'வேகங்கள்' சாதித்து காட்டினர்.

தற்போது முன்னணி வேகப்பந்து வீச்சாளர்கள் அணியில் இணைவது கூடுதல் வலுச் சேர்க்கிறது.

முதல் டெஸ்ட் போட்டிக்கு பின் இங்கிலாந்து வீரர் பட்லர் நாடு திரும்புவது, இந்திய அணியில் 'சகல துறை வீரர் ஜடேஜா இணைய இருப்பது போன்றவை சொந்த மண்ணில் விளையாடும் அணிக்கு சாதகமாக கருதுகிறேன். இவ்வாறு சப்பல் கூறினார்.

# தரம் 1 அனுமதி தெரிவு பட்டியல் வெளியாகியது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலகத்துக்கு உட்பட்ட யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை, யாழ் ஜோன் பொஸ்கோ வித்தியாலயம், கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை ஆகியவற்றில் தரம் 1 அனுமதிக்கான மாணவர் தெரிவு பட்டியல் நேற்றைய தினம் வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த பாடசாலைகளுக்கு விண்ணப்பித்து அனுமதி கிடைக்காத பெற்றோர்கள் மேன்முறையீடு செய்ய முடியும் எனவும்,

இந்த மேன்முறையீட்டை எதிர்வரும் 8ஆம் திகதிக்கு முன்னராக அந்தந்த பாடசாலை அதிபர்களுக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

**விற்பனை உதவியாள் தேவை**

யாழ். நகரில் இயங்கும் எமது புடவை நிறுவனத்துக்கு புடவை வியாபாரம் பழக ஆர்வமுள்ள ஆண்/பெண் விற்பனை உதவியாள் தேவை. (5498)

**சிவகணேசன் Textiles**
பெரியகடை வீதி
No.41, Grand Bazzar, Jaffna

**காணி தேவை**

கல்லுண்டாய் வீதியில் காக்கைதீவு மீன் சந்தைக்கும் அராலி பாலத்திற்கும் இடைப்பட்ட இடத்தில் 1 ஏக்கர் அளவுடைய வெற்றுக் காணி உடனடியாக தேவை.
(தரகர் தேவையில்லை.) (5407)

**தொடர்பு- 077 129 8201**

**கட்டடம் வாடகைக்குண்டு**

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி சந்திரச்சந்திக்கு அருகாமையில் கீழ் தளத்தில் ஒரு கடையும் 1ஆம் மாடியில் 2 கடைகளும் 2ஆம் மாடியில் 2 கடைகளும் சகல வசதிகளுடன் உண்டு.
**(தனியார் கல்வி நிலையம், நிறுவனங்கள், களஞ்சியசாலை வியாபார நிலையத்துக்கும் ஏற்றது.)**

**தொடர்பு:- குரு** (5493)

**077 805 1655**
**077 596 3845**

**கண்ணீர் அஞ்சலி**



யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் நல்லூர்/கோப்பாய் கிளை அங்கத்தவரும் **சதா பேக்கரி** உரிமையாளருமாகிய **கோபாலசுந்தரம் - இராஜேஸ்வரி** தம்பதியரின் அன்பு மகன்

அமரர் **கோபாலசுந்தரம் கவிதாஸ் (கவி)**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்**
**நிர்வாகத்தினர், அங்கத்தவர்கள், பணியாளர்கள்**

(C-1975)

# தேசிய கீதம் தமிழிலும் இசைக்கப்பட வேண்டும்

## இன ஐக்கியத்தை விரும்பும் அனைவரதும் எதிர்பார்ப்பும் இதுவே

(கொழும்பு)

**73வது சுதந்திர தின நிகழ்வில் தேசிய கீதம் தமிழிலும் இசைக்கப்பட வேண்டும் என்று ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் பிரசாரச் செயலாளர் ஐ.எம்.ஹாரிப் கோரிக்கை விடுத்துள்ளார்.**

73 வது சுதந்திர தின நிகழ்வு எதிர்வரும் 4 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ள நிலையில் ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் பிரசாரச் செயலாளர் ஐ.எம்.ஹாரிப் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் அவர் தெரிவித்துள்ளதாவது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நல்லாட்சி காலத்தில் எமது நாட்டின் சுதந்திர தின நிகழ்வுகளில் தமிழிலும் தேசியகீதம் இசைக்கப்பட்டது.

ஆனால்சென்றவருடம்நடைபெற்ற சுதந்திர தின நிகழ்வில் தமிழில் தேசியகீதம் இசைக்கப்படாதது பாரியதொரு மனக்கவலையினை இந்நாட்டு மக்களுக்கு ஏற்படுத்தி இருந்தது.

ஆனால் இவ்வருடம் பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி நடை



பெறவுள்ள 73ஆவது சுதந்திர தின நிகழ்வில் தமிழிலும் தேசியகீதம் இசைக்கப்பட வேண்டும் என்பது அனைத்து இன மக்களதும் விருப்பமாகவுள்ளது.

நடைபெறப் போகும் இந்த 73 வது சுதந்திர தின நிகழ்வினை சகல மக்களும் கவலையற்ற மனதோடு சுதந்திரமாக, சுதந்திர தின நாளினை நினைவுகூர வேண்டும் எனபதே இன ஐக்கியத்தினை விரும்புகின்ற, நேசிக்கின்ற அனைவரதும் எதிர்பார்ப்பாகவும் உள்ளது.

இந்நாட்டு மக்கள் சகலரதும் அபிலாசைகளும் நிவர்த்தி செய்யப்பட வேண்டும் என்பதனை இத்தருணத்தில் நாங்களும்வலியுறுத்துகின்றோம் என கோரிக்கை விடுத்தார். (நி-4)

---

## போராட்டத்திற்கு பிள்ளையான் வியாழேந்திநுக்கு அழைப்பு

(மட்டக்களப்பு)

அரசியலையும், கட்சியையும் ஓரமாக வைத்துக் கொண்டு தமிழன் என்ற உணர்வுடன் மட்டக்களப்பில் எதிர்வரும் 4 ஆம் திகதி நடைபெறவுள்ள இன அடக்குமுறைக்கு எதிரான உண்ணாவிரதப் போராட்டத்திற்கு பிள்ளையான் மற்றும் வியாழேந்திரனுக்கும் அழைப்பு விடுவதாக தமிழ் உணர்வாளர்கள் அமைப்பின் தலைவர் க.மோகன் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 4 ஆம் திகதி மட்டக்களப்பு தமிழ் உணர்வாளர்கள் அமைப்பினால் மேற்கொள்ளப்படவுள்ள அடக்குமுறைக்கு எதிரான உண்ணாவிரதப் போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கும் முகமாக வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (நி-4)

---

## சுதந்திர தின நிகழ்வில் சிங்கள மொழியில் மட்டுமே தேசியகீதம் இசைக்கப்படும்


(கொழும்பு)

இலங்கையின் 73வது சுதந்திர தின நிகழ்வில் சிங்கள மொழியில் மாத்திரமே தேசிய கீதம் இசைக்கப்படும் என பாதுகாப்பு செயலாளர் கமால் குணரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். நாட்டில் தற்போது காணப்படுகின்ற நிலைமை காரணமாக, இந்த முறை சுதந்திர தின நிகழ்வுகளை பார்வையிட மக்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன், சுதந்திர தின கொண்டாட்டங்களில் பங்கேற்கும் அனைத்து படையினரும் பி.சி.ஆர்.அல்லது அன்டிஜன் சோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பரிசோதனை அறிக்கைகள் ஒழுங்காக இருந்தால் மாத்திரமே படையினர் அணிவகுப்



பில் ஈடுபடுத்தப்படுவார்கள் என்றும் அவர் கூறியுள்ளார். (நி-4)

---

## மேல் மாகாண பாடசாலைகளில் அன்டிஜன் பரிசோதனை

(கொழும்பு)

மேல் மாகாண பாடசாலைகளில் எழுமாற்றாக மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களை தெரிவு செய்து உடனடி அன்டிஜன் பரிசோதனைக்கு உட்படுத்தும் வேலைத்திட்டத்தின் முதற்கட்ட நடவடிக்கைகள் நேற்று ஆரம்பமாகின.

ராஜகிரிய ஜனாதிபதி வித்தியாலயத்தில் இந்நிகழ்வு ஆரம்பமானது. இதில் கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர். அங்கு கருத்து தெரிவித்த அமைச்சர்,

நாளொன்றுக்கு இரண்டு, மூன்று பாடசாலைகளை தேர்ந்தெடுத்து ஒவ்வொரு பாடசாலைகளிலும் சுமார் 30 மாணவர்களை உடனடி அன்டிஜன் பரிசோதனைக்கு உட்படுத்துவதன் ஊடாக பாடசாலைகளில் எந்தளவிற்கு கொவிட் 19 வைரஸ் பரவியுள்ளது என எனக்கு அறிந்துக்கொள்ள முடியும்.

பாடசாலைகளை திறப்பது மற்றும் ஏனைய அனைத்து விடயங்களுக்கும் இந்த தகவல்கள் மிகவும் உதவியாக இருக்கும்.

அதுமட்டுமல்லாமல் மாணவர்களின் உடல்நிலை, சிறுநீரகம் மற்றும் எல்லாவற்றையும் பரிசோதனைக்கு உட்படுத்தி அவர்களுக்கு இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு உள்ளதா என அனைத்து செயற்பாடுகளையும் இதன் போது மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளோம் என அவர் தெரிவித்தார். (நி-4)

---

## மலையகத்தில் மாணவர் வருகை வீழ்ச்சி

(ஹற்றன்)

மலையகத்தில் சுகாதார நடைமுறைகளுடன் பாடசாலைகளில் கல்வி நடவடிக்கை மீண்டும் ஆரம்பமாகியிருந்தாலும், மாணவர்களின் வருகை என்பது இன்னும் முழுமையாக இல்லை என தரவுகள் தெரிவிக்கின்றன.

பெருந்தோட்டப்பகுதிகளில் உள்ள சில தமிழ் மற்றும் சிங்கள பாடசாலைகளில் மாணவர்களின் வருகையானது 30 வீதத்துக்கும் குறைவாகவே இருப்பதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

மேலும் அதிபர்கள், ஆசிரியர்கள் உட்பட பாடசாலை நிர்வாகத்தினர் சமுகமளிக்கின்ற போதிலும், மாணவர்களை பாடசாலைக்கு அனுப்புவதற்கு சில பெற்றோர் இன்னும் தயக்கம் காட்டும் நிலை நீடிக்கின்றது.

இப்பாடசாலையில் தரம் 3 இல் கல்வி பயிலும் மாணவரொருவருக்கு அண்மையில் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

அதன் பின்னரே வருகை நன்றாகவே வீழ்ச்சியடைந்துள்ளது. (நி-4)

---

## விபத்தில் உயிரிழப்பு

(ஏறாவூர்)

மட்டக்களப்பு - வந்தாறு மூலை எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்பாக இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு வாழைச்சேனையில் இருந்து செங்கலடி நோக்கி சென்ற மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதி நேற்றிரவு விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்தில் செங்கலடி பிரதான வீதியைச் சேர்ந்த 28 வயதான இளைஞர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-4)

---

## கிழக்கு முனையத்தை வெளிநாடுகளுக்கு வழங்குவதை கண்டித்து திருமலையில் ஆர்ப்பாட்டம்



(திருமலை)

இலங்கை அரசானது கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்குவதை கண்டித்து திருகோணமலை துறைமுக அதிகாரசபையின் ஊழியர்களால் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

திருகோணமலை துறைமுக அதிகாரசபையின் வாயிலில் ஊழியர்களால் ஆரம்பிக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் பேரணியாக ஒன்று திரண்டு திருகோணமலை - மட்டக்களப்பு பிரதான வீதி வரை சென்று கோஷமிட்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இலங்கை அரசானது கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தினை மாத்திரமல்லாது தெற்கு பகுதியினைக் கூட தாரைவார்ப்பதற்கு தயாராகிவருவதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (நி-4)

# வடக்கில் ஜனவரியில் மட்டும் 557 பேர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

**வடமாகாணத்தில் ஜனவரி மாதத்தில் மட்டும் 557 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடையவர்களாக உறுதிப் படுத்தப்பட்டுள்ளனர் என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், தொற்றுக்குள்ளானவர்களில் 330 பேர் வவுனியா மாவட்டத்திலிருந்தும் 159 பேர் மன்னார் மாவட்டத்திலிருந்தும், 46 பேர் யாழ்ப்பாணம் மாவட்டத்திலிருந்தும் 14 பேர் கிளிநொச்சி மாவட்டத்திலிருந்தும், 8 பேர் முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்தும் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்தார்.

கொரோனா தொற்று ஏற்பட்ட ஆரம்ப காலத்திலிருந்து வடமாகாணத்தில் இதுவரை 805 கொவிட் -19 நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் அதிகபட்சமாக 362 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 221 பேரும், மன்னார் மாவட்டத்தில் 176 பேரும் கிளிநொச்சி மாவட்டத்தில் 34 பேரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 12 பேரும் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

கொரோனா தொற்று ஆரம்பமான காலம் முதல் இன்று வரை வடமாகாணத்திலே கொவிட் -19 நோயால் மூன்று இறப்புக்கள் ஏற்பட்டுள்ளன. மன்னார் மாவட்டத்தில் இரு இறப்புக்களும் வவுனியா மாவட்டத்தில் ஒரு இறப்பும் ஏற்பட்டுள்ளது.

2021 ஜனவரி மாதம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் 11 ஆயிரத்து 329 பேரின் மாதிரிகளும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் 4 ஆயிரத்து 626 பேரின் மாதிரிகளும் பி.சி.ஆர்.பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன எனவும் தெரிவித்தார். (5-4-33)



# வீதிகளில் கூடுவோர் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும்

## சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்

(கரணவாய்)

வீதிகளில் தேவையற்ற விதத்தில் நிற்கும் இளைஞர்கள் மற்றும் வேகமாக பயணிக்கும் மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கர வண்டிகள் போன்றவற்றின் சாரதிகள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சிவில் பாதுகாப்பு கலந்துரையாடல் நேற்று வல்வெட்டித்துறை நெடியகாடு கணபதி மஹால் மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் சிவில் பாதுகாப்பு குழுவினரால் பாடசாலைகள் முடிவடையும் நேரங்களில் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் முச்சக்கர வண்டிகள் போன்றன வேகமாக அச்சுறுத்தும் வகையிலும் ஈடுபட்டு வருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இது தொடர்பாக வல்வெட்டித்துறை பொலிஸார் கவனமெடுத்து, தேவையற்ற விதத்தில் வீதிகளில் தரித்து குழுக்களாக நிற்கும் இளைஞர்கள், இரவு நேரங்களில் வீதிகளில் ஒன்றுகூடும் இளைஞர்கள், மற்றும் பாடசாலை மாணவர்களின் போக்குவரத்திற்கு இடையூறு செய்வோர் போன்றவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தனர்.

காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யூ. பி.ஜே.சேனதீப தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட 23 கிராம உத்தியோகத்தர் பிரிவின் கிராம உத்தியோகத்தர்கள், சிவில் பாதுகாப்பு குழுத் தலைவர்கள், உறுப்பினர்கள், பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர். (5-4-60)

# விசேட பூஜை வழிபாடு

(யாழ்ப்பாணம்)

உலகெங்கிலும் வாழும் மக்கள் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து மீள்வதற்காக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இறை ஆசி வேண்டி விசேட பூஜை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

அந்தவகையில் நாளை மறுதினம் 4 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 6.30 மணிக்கு சாவகச்சேரி வடக்கு ஆதி சிவ வீரபத்திரேஸ்வரர் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

விசேட பூஜை வழிபாடுகளின் நிறைவில் ஆலய பிரதம குருக்கள் சிவஸ்ரீ இ.பாலகுமாரக்குருக்களின் அருளாசி உரையும் வேத பாராயணமும் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வு இலங்கை ஒலி பரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் இடம் பெறும் "ஆலய தரிசனம்" நிகழ்ச்சியில் காலை 6.30 மணிக்கு ஒளிபரப்பு செய்யப்படும். (5-4)

## குருந்தூர் மலை விவகாரம்

# இந்து சமய பேரவை இன்று அவசரமாகக் கூடுகின்றது

(யாழ்ப்பாணம்)

குருந்தூர் மலை விவகாரம் தொடர்பில் ஆராய்வதற்கு இந்து சமயப் பேரவை இன்று 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு அவசரமாகக் கூடுகிறது என இந்து சமயப் பேரவையின் தலைவர் ஈசான சக்தி கிரீவன் அறிவித்துள்ளார்.

அந்நியர் ஆட்சிக்காலத்திலிருந்து இந்து ஆலயங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன.

எனினும் இதற்கான சுவடுகள் காணப்படுகின்றன. இவ் ஆலயங்களை புனரமைப்பு செய்வதற்கு எந்தவொரு அரசும் நடவடிக்கை எடுக்கவில்லை.

ஆனால் பௌத்த விகாரைகளை அவ்விடங்களில் ஸ்தாபிக்க பல்வேறு யுக்திகளைக் கையாண்டு வருகிறது.

இதன் ஓர் அங்கமே குருந்தூர்மலை விவகாரம். இதனைத்தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்க்காக பேரவை நிர்வாக சபை கூடுகிறது.

எனவே இக்கூட்டத்தில் நிர்வாகசபை உறுப்பினர்களைத் தவறாது பங்குபற்றுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

சட்டத்தரணிகள், இந்துமத ஆர்வலர்கள், அபிமானிகள் ஆகியோரைத் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

இக்கூட்டத்திற்கு வருகை தருவோர் தங்களது வருகையை 0761688277 என்ற இலக்கத்தோடு தொடர்பு கொண்டு உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டுள்ளார். (5-4)

## வரணிப் பகுதியில் திருட்டு

# சி.சி.ரி.வி.ஆதாரத்துடன் பொலிஸில் முறைப்பாடு

(சாவகச்சேரி)

தென்மராட்சி கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வரணி பகுதியில் திருட்டுக்கள் தொடரும் நிலையில் நேற்றும் ஆசிரியர் ஒருவரின் வீட்டில் திருட்டுச் சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மதியம் கரம்பைக் குறிச்சி கிழக்கு பகுதியில் இடம் பெற்றுள்ளது.

வீட்டில் யாரும் இல்லாத நேரம் பார்த்து வெல்டிங் வேலைக்கு பயன்படுத்தப்படும் இயந்திரம் ஒன்றும் இரும்பு வெட்டுவதற்கு பயன்படுத்தப்படும் கிறைண்டர் ஒன்றும் திருடப்பட்டு பக்கத்தில் உள்ள வீட்டில் வைக்கப்பட்டு பின்னர் ஆட்டோவில் ஏற்றிச் செல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை குறித்த நபர் திருடிய பொருட்களை வைத்த வீட்டில் சி.சி.ரி.வி. கமராவில் இருந்தமையால் பொருள் வைத்து எடுப்பது கமராவில் பதிவாகியுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பான சி.சி.ரி.வி.ஆதாரத்துடன் ஆசிரியர் கொடிகாமம் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். (5-4-33)

## ஆன்மிக சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் நடைபெறும் வாராந்தச் சொற்பொழிவு எதிர்வரும் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.15 மணியளவில் ஆலய சண்முக விலாச மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சிவநெறிச்செம்மல் இளம் சைவப்புலவர் ச.நவநீதன் "கந்தன் புகழ் பாடிய கச்சியப்பர்" என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றவுள்ளார். (5-4)



கரணவாய் செல்வாபுரம் இளங்கோ சனசமூக நிலையத்தினரால் செல்வாபுரம் வீதி நேற்று முன்தினம் துப்புரவு செய்யப்பட்டது. (படம்:-மகாலிங்கம்)

# தமிழின அழிப்பிற்கு எதிரான போராட்டத்திற்கு களுவாஞ்சிக்குடி நீதிமன்றம் தடை விதிப்பு

(களுவாஞ்சிக்குடி)

தமிழின அழிப்புக்கு எதிராக பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை முன்னெடுக்கப்படவுள்ள போராட்டத்துக்கு முதலாவது தடை உத்தரவு களுவாஞ்சிக்குடியில் பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஜெனிவாவில் நடைபெறும் ஐ.நா. மனித உரிமைகள் சபை அமர்வின்போது, மக்களைத் தூண்டிவிட தமிழ்க் கட்சிகள் இந்தப் போராட்டத்தை நடத்துகின்றன என்று தெரிவித்து பொலிஸார் தாக்கல் செய்த அறிக்கையின் பிரகாரம், களுவாஞ்சிக்குடி பிரதேசத்தில் போராட்டங்களை நடத்த நீதிமன்றம் தடைவிதித்துள்ளது.

அத்துடன், இது குறித்த அறிவிப்புக்கள் பல்வேறு அரசியல் பிரமுகர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டு வருகின்றன.

இந்தநிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனுக்கும் நீதிமன்றம் தடை விதித்துள்ளது. இந்தத் தகவலை அவர் அறிக்கையூடாக உறுதிப்படுத்தியுள்ளார். (நி-4)

# ஐ.நா.மனித உரிமை ஆணையகம் வெளியிட்ட
# காணொளிக்கு இலங்கை எதிர்ப்பு

(கொழும்பு)

**ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையகம், தனது டுவிட்டர் பதிவில் இலங்கைக்கு எதிராக வெளியிட்டுள்ள காணொளிக்கு வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.**

குறித்த டுவிட்டர் பதிவு தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளதாவது, "ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையகத்தின் குறித்த செயற்பாடு சிறந்ததொன்று அல்ல.

தனது டுவிட்டர் பதிவில், கடந்த கால மனித உரிமை மீறல்களை இலங்கை கவனிக்கத் தவறியுள்ளது.

ஆகையினால்மனித உரிமை மீறல்கள் மீண்டும் மீண்டும் நிகழும் அபாயத்தை ஏற்படுத்தியுள்ளது எனப் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும்இலங்கையில் நடைபெற்ற யுத்தத்துடன் தொடர்பான காணொளி காட்சிகளையும் டுவிட்டரில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையகம் பதிவேற்றியுள்ளது. (நி-4)

# களுத்துறை, கம்பஹா பாடசாலைகள் இம்மாதம் 15 இல் மீள ஆரம்பம்

## கல்வி அமைச்சர் அறிவிப்பு



(கம்பஹா)

கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டிருந்த மக்களின் இயல்பு வாழ்க்கை, தற்போது வழமைக்கு திரும்பிவருகிறது.

இந்நிலையில், கம்பஹா மாவட்டத்திலுள்ள 590 பாடசாலைகளில் 589 பாடசாலைகளையும் களுத்துறை மாவட்டத்திலுள்ள 446 பாடசாலைகளில் 442 பாடசாலைகளையும் எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் கல்வி நடவடிக்கைகளுக்காக மீள ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இம்முடிவை அறிவித்துள்ளார்.

அத்தோடு, கொழும்பு மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் கல்வி செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பது குறித்து இவ்வார இறுதியில் தீர்மானமொன்று வெளியிடப்படும் எனவும் கல்வி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# 14 ஆயிரத்திற்கு மேற்பட்ட இராணுவ வீரர்களுக்கு செலுத்தப்பட்ட தடுப்பூசிகள்

(கொழும்பு)

14 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இராணுவ வீரர்களுக்கு இதுவரை கொவிட் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளதாக பாதுகாப்புப் பதவி நிலை பிரதானியும் இராணுவத் தளபதியும் கொவிட் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவருமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இந்தியாவிலிருந்து பெறப்பட்ட தடுப்பூசிகளில் 31,000 டோஸ்கள் இராணுவத்தினருக்காக ஒதுக்கப்பட்டுள்ளதுடன் அவற்றில் 14 ஆயிரம் இராணுவ வீரர்களுக்கு நேற்றுக் காலை வரை கொவிட் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளன.

இதேவேளை, கொவிட் - 19 பரவலை கட்டுப்படுத்துவதற்கான போராட்டத்தில் முன்வரிசையிலிருந்து போராடும் இராணுவ வீரர்களுக்கு ஏற்றுவதற்காக அஸ்ட்ராஜெனெகா கோவிஷீல்ட் தடுப்பூசிகள் இராணுவ மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-4)




ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களை பிரபல பாடசாலைகளில் சேர்ப்பதற்கான வெட்டுப்புள்ளிகள் நியாயமற்ற முறையில் உயர்த்தப்பட்டுள்ளதாகக் கூறி கோட்டை தொடரூந்து நிலையத்திற்கு அருகில் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

பாடசாலைகளை பாதுகாக்கும் மக்கள் இயக்கத்தால் இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

## வர்த்தக அமைச்சின் செயலருக்கு கொரோனா

(கொழும்பு)


வர்த்தக அமைச்சின் செயலாளர் பத்ரானி ஜெயவர்தன கொவிட்-19 தொற்றுக்குள்ளாகியுள்ளதாக அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பி.சி.ஆர்.பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட முடிவுகள் நேற்று வெளியாகியுள்ள நிலையிலேயே கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இதேவேளை அவருடன் தொடர்புகளைப் பேணியதன் காரணமாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தனவும் பி.சி.ஆர்.சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். (நி-4)

# குறை'களை' பதிகம்

## நல்லைக்கந்தனின் நுழைவாயில் வீதி குண்டும் குழியுமாய் உள்ளது கண்டீரோ?



தேவரைக் காத்தருள
சரவணப் பொய்கை தனில்
தீப்பொறியாய் அவதரித்த
ஆறுமுகன் கந்தன் அவன்
வள்ளி தெய்வ யானையுடன் வீற்றிருந்து
அருளை அள்ளிச் சொரியும்
நல்லைக் கந்தனை அறியாதார் யாரிருப்பர்
அவன் அருளை பருகாதார் யாறிருப்பர்

கந்தனவன் தரிசனத்தை
கண்டுணர வகை செய்து
செம்மணியில் நல்லதொரு
செயற்பாடு அரங்கேற
அலங்காரக் கந்தனுக்கு
அமைந்தது, அழகிய நல் நுழைவாயில்

கந்தனவன் நுழைவாயில் அழகுகண்டு
தேவலோகமே வியந்து நிற்க,
அவன் அழகுதனை
காணக்கண் கோடி வேண்டும்

அழகும் அருளும் ஒருங்கே அளிக்கும்
நுழைவாயிலின் வீதியது
பட்டுக்குஞ்சத்தில் மறை வீழ்ந்தாற்போல்
குண்டும் குழியுமாய் காட்சிதர,
கந்தா! உன் அழகைக் கண்டுணர
உன் அடியை நாடிவரும் வீதியது
செப்பனிடாதததது ஏனோ?

அழகிய நுழைவாயில் அமைத்து
கந்தன் அருள் பெறச் செய்த சான்றோரே!
கந்தன் நுழைவாயில் வீதி
உம் கண்ணில் படாதது ஏனோ?

கந்தன் நுழைவாயில் அமர்ந்திருக்கும்
செம்மணி வீதியதை உடன் செப்பனிட
அதிகாரிகளே அவசரமாய் உத்தரவிடுங்கள்
இது நடந்தால்...
அலங்காரக் கந்தனின் அருள்
அனுதினம் உமக்குக் கிடைக்கும்!

**மாவை. நா.கஜேந்திரன்**

## கொரோனா பரவல்

# வெந்நீரூற்று பகுதிக்கு உட்செல்ல தடை விதிப்பு

(திருமலை)

திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபைக்கு உட்பட்ட கன்னியா வெந்நீர் ஊற்றுப் பகுதிக்குள் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றுக்குள் உள்ளானவர்கள் அங்கு வந்து சென்றதாக தகவல்கள் பரவியதை அடுத்தே வெந்நீர் ஊற்றுப் பகுதிக்குள் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டது. (நி-4)

# அரசியல் கைதிகளை விடுவிக்கக்கோரி கிளிநொச்சியில் வீதி மறியல் போராட்டம்

(முறிகண்டி)

**சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரி கிளிநொச்சியில் தொடர் போராட்டம் நேற்று ஆரம்பமானது.**

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்பாக ஒன்றுகூடிய உறவுகள் கவனஈர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது ஏ-9 பிரதான வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்ட நிலையில் சில நிமிடங்கள் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

இதேவேளை கடமையில் ஈடுபட்டிருந்த போக்குவரத்துப் பொலிஸார் போக்குவரத்தினை சீர்செய்ய முற்பட்ட போதும் போக்குவரத்தினை முழுமையாகச் சீர்செய்ய முடியாத நிலையில் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொண்டனர்.



அதற்கு அமைவாக வீதியின் ஒரு பகுதியின் ஊடான போக்குவரத்து இடம்பெற்றது.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த கிளிநொச்சி தலைமை பொலிஸ் அதிகாரி தலைமையிலான பொலிஸார் போராட்டக்காரர்களை வீதியின் கரைக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொண்டனர்.

இந்த நிலையில் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் நீண்ட நேரம் பேச்சுவார்த்தை இடம்பெற்றது.

கவன ஈர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தொடர்ச்சியான போராட்டத்தை முன்னெடுக்க உள்ளதாக தெரிவித்தனர். குறித்த போராட்டம் பந்தல் அமைக்கப்பட்டு தொடர் போராட்டமாக முன்னெடுக்கப்பட்டுள்ளதாக கைதானவர்களின் உறவுகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-4-100-316)


# இசை ஆராதனை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையின் ஏற்பாட்டில் நல்லைக் கந்தன் குருஷேத்திர மாணவர்கள் நடத்தும் சற்குரு தியாக ராஜ சுவாமிகளின் 174 ஆவது இசை ஆராதனை நிகழ்வு இன்று 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் இந்து சமயப் பேரவையில் அதன் தலைவர் ஈசான சிவசக்தி கிரீவன் தலைமையில் இடம் பெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் ச. பாலச்சந்திரனும் சிறப்பு விருந்தினராக யாழ்.மாநகர சபை முதல்வர் சட்டத்தரணி வி. மணிவண்ணனும் கலந்து கொள்வர். (5-4)

# பட்டதாரி பயிலுநர்களிற்கு நியமனம் வழங்கி வைப்பு



(நெளுக்குளம்)

பட்டதாரி பயிலுநர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு வவுனியா பிரதேச செயலக மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

நாட்டில் 50 ஆயிரம் பட்டதாரிகளுக்கு அரச நியமனங்கள் வழங்கி வைக்கப் பட்டுள்ளன. அந்த வகையில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த 357 பட்டதாரிகள் பயிலுநர்களாக இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

குறித்த நேர்முகத்தேர்வில் பல்வேறு காரணங்களுக்காக நிராகரிக்கப்பட்ட பட்டதாரிகள் பலர் மேன்முறையீடு செய்திருந்த நிலையில் அவர்களில் வவுனியாவை சேர்ந்த மேலும் 38 பேர் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் 30 பேருக்கான நியமனக்கடிதங்கள் வழங்கும் நிகழ்வு வவுனியா பிரதேச செயலகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதேச செயலாளர் ந.கமலதாசன் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் திருமதி.கருணாநிதி ஆகியோர் பட்டதாரிகளுக்கான நியமனக்கடிதங்களை வழங்கி வைத்தனர். (5-4-299)

# வவுனியாவில் வழமைக்கு திரும்பியது பாடசாலை மாணவர்களின் வருகை

(நெளுக்குளம்)


வவுனியா மாவட்டம் தவிர்ந்த வடக்கிலுள்ள பாடசாலைகள் அனைத்தும் கடந்த 11 ஆம் திகதி ஆரம்பமாகியிருந்தன. வவுனியா மாவட்டத்தில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதையடுத்து நகரிலுள்ள ஆறு பாடசாலைகள் மூடப்பட்டன.

இந்நிலையில் கடந்த 18 ஆம் திகதி வவுனியாவில் மூடப்பட்ட பாடசாலைகள் அனைத்தும் திறக்கப்பட்டு கல்விச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

இருப்பினும் மாணவர்களின் வரவு மிகவும் குறைந்தளவில் காணப்பட்டுள்ளதுடன் பெற்றோர்களிடம் காணப்பட்ட கொரோனா அச்சம் காரணமாக மாணவர்களை பாடசாலைக்கு அனுப்புவதைத் தவிர்த்து வந்தனர்.



நேற்றைய தினம் குறித்த பாடசாலைகளில் மாணவர்களின் வரவு வழமைக்குத் திரும்பியதை அவதானிக்க முடிந்துள்ளதுடன் கொரோனா நடைமுறை பாதுகாப்புக்களுடன் பெற்றோர்கள் மாணவர்களை பாடசாலைக்கு அழைத்துச் செல்வதை அவதானிக்கவும் முடிந்தது. (5-4-299)



கல்வி வளர்ச்சி அறக்கட்டளையின் தலைவரும் யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளருமான மருத்துவர் த.சத்தியமூர்த்தி கடந்த வெள்ளிக்கிழமை கோணாவில் மகா வித்தியாலயம், ஊற்றுப்புலம் பாடசாலை, புதுமுறிப்பு விக்கினேஸ்வரா வித்தியாலயம் ஆகிய பாடசாலை மாணவர்களுக்கு கல்வி, சுகாதாரம், ஒழுக்கம், தலைமைத்துவம் பற்றிய விழிப்புணர்வு கருத்துக்களை வழங்கினார். (படங்கள்:-கிருஷ்ணகுமார்)

# குழந்தைகளுக்கான மரத்தோட்டம் தொடர்பான கலந்துரையாடல்

(கண்டாவளை)

பாடசாலைக்கு புதிதாக வருகை தரவிருக்கும் தரம் ஒன்று மாணவர்களுக்கான ஒவ்வொரு பழமரக்கன்று கள் வழங்கி வைக்கும் குழந்தைகளுக்கான மரத்தோட்டம் தேசிய மர நடுகைத்திட்டம் தொடர்பான அறிமுக கலந்துரையாடல் மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் தலைமையில் கடந்த வாரம் இடம் பெற்றது.

விவசாய திணைக்களம், கல்வித் திணைக்களம், மாவட்ட செயலகம், கமநல சேவைகள் திணைக்களம் ஆகியன இணைந்து இத்திட்டத்தை மாவட்டத்திலுள்ள அனைத்து பாடசாலைகளிலும் நடைமுறைப்படுத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறித்த திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு கல்வி வலயத்திலுள்ள 61 பாடசாலைகளின் 1374 மாணவர்களும் துணுக்காய் கல்வி வலயத்திலுள்ள 54 பாடசாலைகளின் 550 மாணவர்களுமாக 115 பாடசாலைகளுக்கும் தலா ஒவ்வொரு மரக்கன்றுகளுமாக மாவட்டத்தில் 2039 பழமரக்கன்றுகள் இத் திட்டத்தின் கீழ் நாட்டி வைக்கப்படவுள்ளன.

இக்கலந்துரையாடலில் மாவட்ட விவசாயப் பணிப்பாளர், மாவட்ட பொறியியலாளர், மாகாண விவசாயப் பணிப்பாளர், கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர், பிரதேச செயலாளர்கள், வலயக் கல்வித்திணைக்களங்களின் ஆரம்பப் பிரிவு உதவிப் பணிப்பாளர்கள், வனஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (5-4-315)

# இராசிபலன்

02.02.2021
தை 20, செவ்வாய்க்கிழமை
பஞ்சமி முன்னிரவு 6.36 மணிவரை
அத்தம் பின்னிரவு 12.44 மணிவரை
சுபநேரம் 11.06 - 12.36 மணிவரை
இராகுகாலம் 3.36 - 5.06 மணிவரை
சந்திராஷ்டமம்:- சதயம், பூரட்டாதி.

வளவன்

**மேஷம்** — ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், குடும்பத்தில் குதூகலம் ஏற்படும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**ரிஷபம்** — பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், அரசு வழியில் அனுகூலம் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**மிதுனம்** — பொதுக் காரியங்களில் ஆர்வம் கூடும், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும்.

**கடகம்** — வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, காரிய அனுகூலமுண்டு.

**சிம்மம்** — குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள், பேச்சில் இனிமை பிறக்கும், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கன்னி** — வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், சிந்தனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு.

**துலாம்** — ஒரு சில வேலைகளுக்காக சற்று அலைய நேரிடலாம், புண்ணிய காரியங்களுக்கு சிறிது செலவு செய்து மகிழ்வீர்கள், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், வேலைச் சுமை அதிகரிக்கும் நாள்.

**விருச்சிகம்** — வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், கொடுக்கல் - வாங்கல்கள் ஒழுங்காகும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**தனுசு** — கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**மகரம்** — போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், மருத்துவச் செலவுகள் குறைந்து ஆரோக்கியம் சீராகும், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள்.


**கும்பம்** — மற்றவர்களிடம் பேசும் போது நிதானம் தேவை, கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், பிரயாண பயமுண்டு.

**மீனம்** — குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம் ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு.

**இலாபம் இல்லாத வியாபாரம் இனிப்பில்லாத கற்கண்டு.**

# கொழும்பு செட்டியார் தெருவில் சட்டவிரோத கட்டடங்கள் இடிப்பு

## ❖பொதுமக்கள், வர்த்தகர்கள் கடும் எதிர்ப்பு
## ❖பதற்றநிலை நீடித்ததால் கட்டட இடிப்பு இடைநிறுத்தம்




(கொழும்பு)
கொழும்பு 11 - செட்டியார் தெருவில் சில வர்த்தக நிலையங்கள், திடீரென உடைக்கப்பட்டதால் குறித்த பகுதியில் அமைதியின்மை நிலை ஏற்பட்டது.

கொழும்பு 11 -செட்டியார் தெருவின், கபொஸ் ஒழுங்கையிலுள்ள வர்த்தக நிலையங்களே இவ்வாறு உடைக்கப்பட்டன. சட்டவிரோதமான முறையில் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளதாக தெரிவித்தே, மேற்படி வர்த்தக நிலையங்கள் உடைக்கப்பட்டன.

பொதுமக்கள், வர்த்தகர்களின் கடும் எதிர்ப்பினையடுத்து வர்த்தக நிலையங்கள் உடைக்கும் நடவடிக்கை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. (நி-4)

# ஆயிரம் ரூபாய் சம்பள உயர்வு விவகாரம் பணிப்பகிஷ்கரிப்பு போராட்டத்திற்கு அழைப்பு

(ஹற்றன்)
பெருந்தோட்ட தொழிலாளர்களின் ஆயிரம் ரூபாய் சம்பள விவகாரம் தொடர்பாக நாடளாவிய ரீதியில் நடத்தப்படவுள்ள பணிப்பகிஷ்கரிப்பு போராட்டத்தில் அனைவரையும் பங்குகொள்ளுமாறு இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் அழைப்பு விடுத்துள்ளார்.



நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கொட்டகலையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"எதிர்வரும் 6 ஆம் திகதி சம்பள நிர்ணய சபையில் இடம்பெறவுள்ள பேச்சுவார்த்தைக்கு தொழிலாளர்கள் மற்றும் ஏனைய தொழிற்சங்கங்கள் உள்ளிட்ட பொது அமைப்புகளின் ஒற்றுமையை வெளிக்கொணரும் வகையில் பேச்சுவார்த்தைக்கு முந்திய தினமான 5 ஆம் திகதி, மலையகம் உள்ளிட்ட நாடளாவிய ரீதியில் அடையாள வேலை பணிப்பகிஷ்கரிப்பு ஒன்றை நடத்த தீர்மானித்துள்ளோம்.

தொழிலாளர்கள், தொழிற்சங்கங்கள் ஆகியவற்றிற்கிடையில் ஒற்றுமை இல்லை என்பது அவர்களின் எண்ணப்பாடாக உள்ளது. ஆகையால் எதிர்வரும் 5 ஆம் திகதி தோட்டங்களில் பணியாற்றும் தொழிலாளர்கள், தொழிலற்றவர்கள் என அனைத்து தரப்பினருடனும் தொழிற்சங்கங்கள் மற்றும் பொது அமைப்புகள் அனைத்தினதும் ஒத்துழைப்புடனும் ஒருநாள் அடையாள பணிப்பகிஷ்கரிப்பு ஒன்றை நடத்தி கம்பனிகளுக்கு ஒற்றுமையை வெளிக்கொண்டு வர இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்தப் பணிப்பகிஷ்கரிப்பு அரசாங்கத்திற்கு எதிரானது அல்ல. மாறாக ஆயிரம் ரூபாய் சம்பள உயர்வுக்கு காட்டப்படும் ஒற்றுமைக்காகவே என ஜீவன் தொண்டமான் அழைப்பு விடுத்தார். (நி-4)

# வர்த்தமானி அறிவிப்புகள் எமது போராட்டத்திற்கான தடைக்கல் அல்ல-துறைமுக ஊழியர் சங்கம்

(கொழும்பு)
துறைமுக சேவையை அத்தியாவசிய சேவையாக வெளியிட்டுள்ள வர்த்தமானி தொழிற்சங்கத்தினரின் போராட்டத்திற்கு தடையல்ல என துறைமுக ஊழியர் சங்கத்தின் பிரதான செயலாளர் நிஷாந்த கொரகாஹேன்ன தெரிவித்தார்.

துறைமுக ஊழியர் சங்கத்தினர் முன்னெடுத்துள்ள தொழிற்சங்க போராட்டம் குறித்து வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஜனாதிபதியுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தை தோல்வியடைந்தது. கிழக்கு முனையத்தின் 49 சதவீத உரிமத்தை இந்திய நிறுவனத்துக்கு வழங்குவதில் எவ்வித மாற்றமும் கிடையாது என ஜனாதிபதி உறுதியாக குறிப்பிட்டார்.

இந்நிலையில் இவ்விடயம் குறித்து கலந்தாலோசிக்க பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.

பிரதமருடனான பேச்சுவார்த்தை சாதகமாக அமையும் என எதிர்பார்க்கிறோம்.

பேச்சுவார்த்தையில் எடுக்கப்படும் தீர்மானத்தின் பின்னரே தொழிற்சங்க போராட்டத்தை முன்னெடுப்பதா, இல்லையா என்பது குறித்து தீர்மானிக்கப்படும் துறைமுக ஊழியர்கள் முன்வைத்துள்ள கோரிக்கைக்குத் தீர்வு கிடைக்கும் வரை தொடர்ந்து போராடுவோம். எமது கோரிக்கையில் எவ்வித மாற்றமும் கிடையாது.

எமது தொழிற்சங்க போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து திருகோணமலை துறைமுக ஊழியர் சங்கத்தினர் தொழிற்சங்க போராட்டத்தை முன்னெடுத்துள்ளார்கள்.

துறைமுக சேவையினை அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தி வெளியிட்டுள்ள வர்த்தமானியினால் எமது தொழிற்சங்க போராட்டத்திற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது.

கொவிட்-19 வைரஸ் தாக்கத்தினால் கடந்த வருடத்தின் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்த காலத்தில் துறைமுக சேவை அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தி வர்த்தமானி வெளியிடப்பட்டது.

அவ் வர்த்தமானியே புதுப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# பண்டத்தரிப்பு பரிஸ் ப.நோ.கூ.சங்கம் (வ-து)
# பதவி வெற்றிடம்

**மேற்படி சங்கத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்காக தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

### கிளை முகாமையாளர் 208/15 வெற்றிடம் - 01

சம்பளத்திட்டம் 13/2015 : 15545 - 18245
130X10 - 140X10

தகைமைகள்:

அ) கூட்டுறவு பணியாளர் 16வது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறைப் பதவியொன்றில் 02 வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 17வது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறைப் பதவியொன்றில் 04 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ)கூட்டுறவுப் பணியாளர் (சாதாரணதரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த (சாதாரண தரம்) கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 06 பாடங்களில் சித்தியும் தொடர்புபட்ட துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

### விற்பனை உதவியாளர் 308/15 வெற்றிடம் - 07

சம்பளத்திட்டம் 13/2015 : 15545 - 18245
130X10 - 140X10

தகைமைகள் : 108/81 இன் படி

அ)கூட்டுறவுப் பணியாளரின் 17வது சம்பளத்திட்டத்தில் விற்பனை உதவியாளர் பதவியில் 05 வருடங்களுக்கு குறையாத அனுபவம்

அல்லது

ஆ)கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (சாதாரண தரம்) / க.பொ.த (சாதாரண தரத்தில்) 02 அமர்வுகளுக்கு மேற்படாமல் வர்த்தக எண்கணிதம் / எண்கணிதம் / தூயகணிதம். சிங்களம் / தமிழ்மொழி என்பவற்றினை உள்ளடங்கியதாக 06 பாடங்களில் சித்தி.

### எழுதுநர் 302/15 வெற்றிடம் - 03

சம்பளத்திட்டம் 13/ 2015 : 15545 - 18245
130X10 - 140X10

தகைமைகள் :166/88 இன் படி

அ)கூட்டுறவுப் பணியாளரின் 16வது சம்பளத்திட்டத்தில் எழுதுநர் பதவியொன்றில் 02 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ)க.பொ.த (சாதாரண தரம்) கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 06 பாடங்களில் சித்தியுடன் கூட்டுறவுச் சங்கமொன்றின் எழுதுவினைஞர் பதவியொன்றில் ஒரு (01) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

- கணனி அறிவு முக்கியமானதாக கொள்ளப்படும்.

### உட்துறைக் கணக்காய்வாளர் 105/09 வெற்றிடம் - 01

சம்பளத்திட்டம் 13/ 2015 : 18010 - 22510
220X10- 230X10

தகைமைகள் :108/81 இன் படி

அ) கூட்டுறவு பணியாளரின் 10வது சம்பளத்திட்டத்தில் கணக்காளர் / உட்துறை கணக்காய்வாளர் பதவியில் 03 வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 11வது சம்பளத்திட்டத்தில் உட்துறை கணக்காய்வாளர் / கணக்குப் பதிவாளர் / கணக்கு அல்லது கணக்குப் பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான எழுதுவினைஞர் பதவியொன்றில் ஆறு (06) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப்பதிவாளர் நிறுவனத்தின் இறுதிப்பரீட்சையில் சித்தியும். அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கு / கணக்கு பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான மேற்பார்வை மட்ட பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

இ) கூட்டுறவுப் பணியாளர் (உயர்தரம்) / க.பொ.த உயர்தரத்தில் கணக்கியலை ஒரு பாடமாகக் கொண்ட மூன்று பாடங்களிலான சித்தியும். கணக்கு / கணக்கு பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான மேற்பார்வை மட்ட பதவியொன்றில் ஆறு (06) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

### கிளை முகாமையாளர் 208/14 வெற்றிடம் - 02

சம்பளத்திட்டம் : 15960 - 18760
135X10 - 145X10

தகைமைகள் : 108/82 இன் படி

அ) கூட்டுறவு பணியாளரின் 15வது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 02 வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 16வது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 04 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ)கூட்டுறவுப் பணியாளர் (சாதாரணதரம்) / க.பொ.த (சாதாரண தரத்தில்) 02 அமர்வுகளுக்கு மேற்படாமல் வர்த்தக எண்கணிதம் / எண்கணிதம் / தூயகணிதம். சிங்களம் / தமிழ்மொழி என்பவற்றினை உள்ளடக்கியதாக 06 பாடங்களில் சித்தி

### எழுதுநர் 302/14 வெற்றிடம் - 01

சம்பளத்திட்டம் 13/2015 : 15960 - 18760
135X10 - 145X10

தகைமைகள் :166/88 இன் படி

அ)கூட்டுறவுப் பணியாளரின் 15வது சம்பளத்திட்டத்தில் எழுதுநர் பதவியொன்றில் 02 வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 16வது சம்பளத்திட்ட எழுதுவினைஞர் பதவியொன்றில் நான்கு வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ)க.பொ.த (சாதாரணதரம்) கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட 05 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

- கணனி அறிவு முக்கியமானதாக கொள்ளப்படும்.

### கணக்காளர் 104/08 வெற்றிடம் - 01

சம்பளத்திட்டம் : 18425 - 23275
230X10-250X10

தகைமைகள் : 108/82 இன் படி

அ) கூட்டுறவு பணியாளரின் 09வது சம்பளத்திட்ட கணக்காளர் அல்லது உள்ளகக் கணக்காய்வாளர் பதவியொன்றில் மூன்று (03) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 10வது சம்பளத்திட்ட கணக்காளர் அல்லது உள்ளகக் கணக்காய்வாளர் பதவியொன்றில் ஆறு (06) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ)பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவன தகுதிச் சான்றிதழ் பரீட்சை அல்லது ஆகுசெலவு மற்றும் முகாமைக் கணக்காளர் நிறுவன தேர்ச்சி சித்தி கட்டம் 1 அல்லது இலங்கை தொழில்நுட்பக் கல்லூரி கணக்கியல் டிப்ளோமா அல்லது சமமான தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனமொன்றின் கணக்காளர் அல்லது உள்ளகக் கணக்காய்வாளர் பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம்

### வங்கிச்சேவை முகாமையாளர் 111/09 வெற்றிடம் - 01

சம்பளத்திட்டம் : 18010 - 22510
220X10-230X10

தகைமைகள் :

அ) கூட்டுறவு பணியாளர் 10வது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறையிலான முகாமை மட்ட அல்லது மேற்பார்வை மட்ட பதவியொன்றில் மூன்று (03) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 11வது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறையிலான முகாமை மட்ட அல்லது மேற்பார்வை மட்ட பதவியொன்றில் ஆறு (06) வருடங்களுக்கு குறையாத அனுபவம்

அல்லது

ஆ) இலங்கை வங்கியாளர் நிறுவன வங்கி அலுவல்கள் டிப்ளோமா சான்றிதழ் பரீட்சை 01ம் பகுதியில் சித்தியுடன் வர்த்தக வங்கி அலுவல்கள் பற்றி இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

இ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டதாரிச் சான்றிதழ் அல்லது சமமான தகைமைகளுடன் வங்கி அலுவல்கள் பற்றி இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஈ)கூட்டுறவுப் பணியாளர் (உயர்தரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த.(உயர்தரம்) 03 பாடங்களில் சித்தியுடன் வங்கித்துறையில் மேற்பார்வை மட்ட பதவியொன்றில் ஆறு (06) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

வயதெல்லை : 18 - 45

(கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது.)

விண்ணப்ப முடிவுத்திகதி : 18.02.2021

மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பத்தினை சங்கத் தலைமைக் காரியாலயத்தில் பெற்று பூரணப்படுத்தி தலைவர், பண்டத்தரிப்பு பரிஸ் ப.நோ.கூ.சங்கம் பண்டத்தரிப்பு என்ற முகவரிக்கு 18.02.2021ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரிலோ அல்லது பதிவுத்தபால் மூலமோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**தலைவர்,**
**பண்டத்தரிப்பு பரிஸ் பல.நோ.கூ.சங்கம்**

(C-1324)

# சந்தைச் செயற்பாடுகளை ஆரம்பிக்க உதவுமாறு - டக்ளஸிடம் கோரிக்கை

(குருமன்காடு)

வவுனியா தினச்சந்தைச் செயற்பாடுகளை மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு சந்தை வர்த்தகர்கள் கடற்தொழிற்றுறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

வவுனியாவிற்கு நேற்று முன்தினம் வருகை தந்த கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை நகரத்தில் அமைந்துள்ள தினச் சந்தை வியாபாரிகள் சந்தித்து கலந்துரையாடினர். இதன்போதே அவர்கள் இவ்வாறு கோரிக்கை முன்வைத்தனர்.

மேலும், கொரோனா அச்சுறுத்தல் காரணமாக மூடப்பட்ட சந்தைச் செயற்பாடுகள் தொடர்ந்தும் நிறுத்தப்பட்டுள்ளமையினால் தங்களுடைய வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக தெரிவித்த சந்தை வியாபாரிகள், வடக்கு மாகாணத்தில் பெரும்பாலான சந்தைகள் மீண்டும் செயற்பட அனுமதிக்கப்பட்ட நிலையிலும் தமக்கு அனுமதி வழங்கப்படாமை ஏமாற்றமளிப்பதாகவும் தெரிவித்தனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு கலந்துரையாடிய கடற்றொழில் அமைச்சர், தேவையான சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி சந்தைச் செயற்பாடுகளை விரைவில் மீள ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார்.

மேலும், வவுனியாவில் அமைக்கப்பட்டுள்ள பொருளாதார மத்திய நிலையத்தினை ஆரம்பித்து வைப்பது தொடர்பாகவும் இச்சந்தர்ப்பத்தில் கலந்துரையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.(5-4-250)

# மியன்மாரில் இராணுவப் புரட்சி சிறைபிடிக்கப்பட்டார் ஆங் சான் சூகி



**( மியன்மார்)**

**மியன்மாரில் இராணுவப் புரட்சி ஏற்பட்டுள்ள நிலையில், அந்நாட் டின் அதிகாரத் தலைவராக இருந்து வரும் ஆங் சான் சூகியை இராணு வம் சிறை பிடித்துள்ளதாக தகவல் வெளி யாகி உள்ளது.**

மியன்மார் நாட்டில் கொரோ னாத் தொற்று அச்சுறுத்தலுக்கு மத்தியில் பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்றது.

மொத்த முள்ள 642 இடங் களுக்கு அந்த நாட்டின் அதிகாரத் தலைவர் ஆங் சான் சூகி தலைமை யிலான தேசிய ஜனநாயக கட்சி உட்பட 90 இற்கும் மேற்பட்ட கட்சிகளைச் சேர்ந்த வேட் பாளர்கள் போட்டியிட்டனர்.

இந்த தேர்தலில் எதிர்பார்த் ததைவிட அதிக எண்ணிக்கையி லான வாக்குகள் பதிவானதாக தேர் தல் ஆணையகம் தரப்பில் தெரிவிக் கப்பட்டது.

தேர்தலில் பதிவான வாக்கு கள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக் கப்பட்ட நிலையில், இதில் ஆட்சி அமைப்பதற்கு தேவையான பெரும் பான்மை யுடன் வெற்றி பெற்றதாக ஆங் சான் சூகியின் தேசிய ஜன நாயகக் கட்சி அறிவித்தது.

இந்தநிலையிலேயே அங்கு இராணுவப் புரட்சி ஏற்பட்டுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவித்துள் ளன.

இதனால் தற்போது, அந்நாட்டில் பெரும் பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக சர்வதேச செய்தி கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (நி-4)

## கொரோனா நிவாரண நிதி திரட்டலுக்காக ஆர்ஜென்டினாவில் பணக்காரர்களுக்கு சிறப்பு வரி

-(புவெனஸ்ஐரிஸ்)

தென் அமெரிக்க நாடான ஆர்ஜென்டீனாவில் கொரோனா வைரஸ் பாதிப்புக்கு நிதி திரட்ட பணக்காரர்களுக்கு சிறப்பு வரி விதிக்கப்பட்டுள்ளது.

தென் அமெரிக்க நாடான ஆர்ஜென்டீனாவில் கொரோனா வைரஸ் பாதிப்பு இருந்து வரு கிறது. அங்கு இதுவரை 47 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ள னர்.

கொரோனா பாதிப்பு காரண மாக அந்நாட்டு பொருளாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள் ளது.

இதனால் மருத்துவ பொரு ட்கள் வாங்கவே அரசு திணறி வருகிறது. மேலும் சிறு தொழில் செய்பவர்கள் பெரிதும் சிரமத் துக்குள்ளாகி இருக்கிறார்கள்.

இதனை சீர்செய்வதற்காக ஆர்ஜென்டீனாவில் பணக்காரர் களுக்கு சிறப்பு வரி விதிக்க அரசு முடிவு செய்தது.

மருத்துவப் பொருட்கள் வாங் கவும், சிறு தொழில்களுக்கு நிவாரணம் அளிக்கவும் முடிவு எடுக்கப்பட்டு 200 மில்லிய னுக்கு மேல் சொத்து வைத் துள்ளவர்கள் நாட்டுக்குள் வைத் திருக்கும் சொத்துகளுக்கு 3 சதவீத வரியும், வெளிநாட்டில் வைத்திருக்கும் சொத்துக்களு க்கு 5 சதவீதத்துக்கு மேல் வரி யும் செலுத்த உத்தரவிட்டு இருக்கிறது.

மில்லியனரின் வரி என்று அழைக்கப்படும் இந்த சிறப்பு வரிமூலம் 2.5 மில்லியன் யூரோ பணம் திரட்ட முடியும் என்று அரசு நம்புகிறது. இதில் 12 ஆயிரம் பேர் வரை வரி செலுத்த வேண்டி உள்ளது.

இந்த மசோதா கடந்த மாதம் பாராளுமன்றத்தில் நிறைவேற் றப்பட்டது. தற்போது அமுலுக்கு வந்துள்ளது. (நி-4)

## வுஹான் உணவுச்சந்தையை ஆய்வு செய்தது நிபுணர்குழு

(பீஜிங்)

கொரோனா வைரஸ் தோன்றியது எப்படி என்று ஆய்வு செய்ய சீனாவின் வுஹான் நகருக்கு சென்று ள்ள உலக சுகாதார நிறுவ னத்தின் நிபுணர் குழு அங் குள்ள உணவு சந்தையை நேரில் பார்வையிட்டது.

சீனாவின் வுஹான் நக ரில்தான் கொரோனா வைரஸ் முதன்முதலில் தோன்றி யது. ஆனால், இதை சீனா மறுத்து வருகிறது.

கொரோனா தோன்றியது எப்படி என்று விசாரணை நடத்த ஒரு நிபுணர் குழுவை உலக சுகாதார நிறுவனம் நியமித்துள்ளது.

இந்த நிபுணர்கள், கால் நடை மருத்துவம், தொற்று நோய் ஆய்வு, உணவுப் பாதுகாப்பு, கொள்ளை நோய் ஆய்வு ஆகியவற்றில் நிபுண த்துவம் பெற்றவர்கள் ஆவர்.

இருப்பினும், இந்த ஒரு பயணத்திலேயே கொரோ னாவின் தோற்றம் பற்றி கண்டுபிடித்து விட முடி யுமா? என்று பல தரப்பிலும் சந்தேகம் எழுப்பப்படுகி றது. (நி-4)

## நவால்னியை விடுதலை செய்யவும் புடினை பதவி விலகவும் கோரி
### ரஷ்யாவில் எதிர்க்கட்சியினர் ஆர்ப்பாட்டம்



(மொஸ்கோ)

ரஷ்யாவில் ஜனாதிபதி புடினுக்கு எதிராக மொஸ்கோ உள்ளிட்ட முக்கிய நகரங்களில் போராட்டத்தில் ஈடுபட்ட 5 ஆயிரம் பேரை பொலிஸார் கைது செய்த னர்.

ரஷ்யாவில் முக்கிய எதிர்க்கட்சி தலைவர் அலெக்சி நவால்னி. கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் நச்சு தாக்குதல் காரணமாக நவால்னி கோமா நிலைக்கு சென்றார்.

இதையடுத்து ஜேர்மனியில் உள்ள மருத்துவமனையில் அவர் அனுமதிக் கப்பட்டார்.

அங்கு தீவிர சிகிச்சைக்கு பிறகு அவர் உயிர் பிழைத்தார். இந்த நிலையில் கடந்த மாதம் 17ஆம் திகதி நவால்னி ரஷ்யா திரும்பினார்.

மொஸ்கோ விமான நிலையம் வந்த அவரை மோசடி வழக்கு ஒன்றில் பரோல் விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டின் பேரில் பொலிஸார் கைது செய்தனர். நவால்னி கைது செய்யப்பட்டதற்கு எதிர்க்கட்சியினர் கடும் எதிர்ப்பு தெரிவித் தனர்.

அவர்கள் நவால்னியை விடுதலை செய்யக்கோரி போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். கடந்த வார இறுதியில் ரஷ்யாவில் போராட்டம் தீவிரம் அடை ந்தது. இந்த நிலையில் பரோல் விதி முறை மீறல் குற்றச்சாட்டில் கைது செய் யப்பட்டுள்ள நவால்னியை விடுவிக்கக் கோரியும் ஜனாதிபதி புடின் பதவி வில கக்கோரியும் கடந்த 2 நாட்களாக ரஷ் யாவில் எதிர்க்கட்சியினர் தீவிர போரா ட்டத்தில் ஈடுபட்டனர்.


இந்த நிலையில் ரஷ்யாவில் அமைதி யாக போராடும் போராட்டக்காரர்கள் மற்றும் பத்திரிகையாளர்களுக்கு எதிராக ரஷ்ய அதிகாரிகள் செயற்படுவதாக அமெரிக்கா கண்டனம் தெரிவித்துள் ளது. (நி-4)



# ஜெனிவா விவகாரத்தை அரசியலாக்காது பொறுப்புணர்வுடன் கையாளுங்கள்

(கொழும்பு)

**சிவில் ஆட்சிக்கு முரணாக செயற்படும் போது சர்வதேசம் எழுப்பும் கேள்விகளுக்கு அரசாங்கம் பதில் கூற வேண்டும் என ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**



கொழும்பில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கல ந்து கொண்டு உரையாற் றுகையில் மேற்கண்ட வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடு கையில்,

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் இலங்கை தொடர்பில் வெளி யிட்ட அறிக்கை குறித்து பல்வேறுப்பட்ட கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை விவகார த்தை அரசியல் கண்ணோ ட்டத்தில் பார்த்து தீர்வை பெறவோ, இணக்கமாக செயற்படவோ முடியாது. நாட்டை முன்னிலைப்படு த்தி பொதுத் தன்மையுடன் செயற்படுவது அவசியமா கும்.

நாட்டின் உள்ளக விவ காரத்தை நல்லாட்சி அரசா ங்கம் சர்வதேச அரங்கிற்கு கொண்டு சென்றதாகக் கூறு வது முற்றிலும் தவறான தாகும்.

2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்த பிறகு முன்னாள் ஜனாதிபதி, தற்போதைய பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஐக்கிய நாடுகள் சபையின் அப் போதைய பொதுச்செயலா ளர் பான் கீ மூனுடன் செய்து கொண்ட ஒப்பந்த த்தின் பிரகாரமே இலங் கையின் உள்ளக விவகா ரங்கள் சர்வதேச அரங்கி ற்குக் கொண்டு செல் லப்பட்டன.

ஒரு நாட்டில் சிவில் ஆட்சி முறை இடம்பெறு கிறதா? அல்லது இராணுவ ஆட்சி முறைமை இடம் பெறுகிறதா? என்பதை ஐக் கிய நாடுகள் சபை உன் னிப்பாக அவதானிக்கும்.

இலங்கையை சிவில் கட்ட மைப்பிலான நிர்வாக முறை மையைக் கொண்ட நாடு என ஐக்கிய நாடுகள் சபை அங்கீ கரித்துள்ளது.

இந்நிலைமைக்கு புற ம்பாக செயற்படும் போது சர்வதேசம் கேள்வி எழுப் பும். அதற்கு பதில் கூற வேண்டிய பொறுப்பு அரசா ங்கத்துக்கு உண்டு.

அனைத்துத் தரப்பினரது ஆலோசனைக்கு அமை யவே இப்பிரச்சினைக்கும் தீர்வு காண முடியும். ஆகவே ஐக்கிய நாடு கள் மனித உரிமை விவகார த்தை அரசாங்கம் பொறு ப்புடன் கையாள வேண்டும் என ரணில் தெரிவித் தார். (நி-4)

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான அறிக்கை கையளிப்பு

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசா ரணை செய்த ஜனாதிபதி விசா ரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

நேற்று முற்பகல் 11.00 மணியளவில் ஜனாதிபதி செய லகத்தில் வைத்து குறித்த அறி க்கை ஆணைக்குழுவின் தலைவர் உயர்நீதிமன்ற நீதி பதி ஜனக் டி சில்வா உள்ளிட்ட உறுப்பினர்களினால் ஜனா திபதியிடம் கையளிக்கப்பட்டு ள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்வதற்காக 2019 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 20 ஆம் திகதி ஐவர் அடங்கிய ஜனாதிபதி விசா ரணை ஆணைக்குழு நியமிக் கப்பட்டது.

அதன்படி, குறித்த விசா ரணைகளின் இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் நேற்று கையளிக்கப்பட்டு ள்ளது. (நி-4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2221

### அபிராமி




நம்பிக்கைக்கு இதைவிட சிறந்த உதாரணம் இருக்காது என்று நினைக்கின்றேன்...
நம்பிக்கை தான் வாழ்க்கை

### அஜந்தா





### சுஜீவன்





### சுந்தர்




### ஆதி




### மது




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# துறைமுக சேவைக்கு சீன அமைச்சரை ஜனாதிபதி நியமித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை

## ஹிருணிகா எச்சரிக்கை

(கொழும்பு)

**எதிர்வரும் காலங்களில் துறைமுகசேவைக்கு சீன அமைச்சரொருவரை நியமிக்கக்கூடிய நிலைமை கூட தோற்றம் பெறும் என்று ஹிருணிகா பிரேமச்சந்திர எச்சரித்துள்ளார்.**



சமகால அரசியல் தொடர்பில் தகவல் வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் பேசிய அவர்,

தேசிய சொத்துக்களை வரலாற்றில் எந்த அரசாங்கத்திலும் இல்லாதளவிற்கு இந்தியா, சீனா என அனைத்து நாடுகளுக்கும் பகிர்ந்தளித்துக் கொண்டிருக்கும் அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிராக மக்கள் ஆரம்பத்திலேயே குரல் கொடுக்கவில்லை என்றால் எதிர்வரும் காலங்களில் துறைமுக சேவைக்கு சீன அமைச்சரொருவரை நியமிக்கக் கூடிய நிலைமை கூட தோற்றம் பெறும்.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் தொடர்பில் ஆளும் தரப்பிலுள்ள சில அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்ப்பினை தெரிவிக்கின்றனர். அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்திற்கு ஆரம்பத்தில் இவ்வாறு எதிர்ப்பை வெளியிட்டவர்கள் தான் இறுதியில் அதற்கு வாக்களித்தார்கள்.

எனவே நாட்டின் தேசிய சொத்துக்கள் தொடர்பில் பற்றும் பொறுப்பும் இருந்தால் தொழிற்சங்கங்களை மாத்திரம் நம்புமாறு கோருகின்றோம். காரணம் தற்போது அரசாங்கத்திற்கு எதிராகப் போராட்டங்களை முன்னெடுக்கும் தொழிற்சங்கள் கட்சிபேதமின்றி இணைந்துள்ளன.

இவ்வாறு முன்னெடுக்கப்பட்டுள்ள தொழிற்சங்க போராட்டங்களை முடக்குவதற்காகவே எதிர்ப்பு தெரிவிப்பதாகக் கூறிக்கொண்டு நாடகமாடுகின்றனர்.


இவர்கள் எதிர்ப்பு தெரிவித்தாலும் கூட ஜனாதிபதி அவர்களை அழைத்து எவ்விதக் கலந்துரையாடலையும் முன்னெடுக்கவில்லை. காரணம் இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் அமைச்சர்களின் அமைச்சு பதவிகள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் பறிபோகக் கூடும். அவ்வாறு ஏதேனும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படடால் தற்போது குரலை உயர்த்தியுள்ள அமைச்சர்களும் மௌனமாகி விடுவார்கள்.

உண்மையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் ஒப்பிடும் போது மகிந்த ராஜபக்ஷ சிறந்தவராவார். அதனால்தான் அவர்களுக்கிடையிலும் தற்போது முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. இவ்வாறான நிலையில் சுதந்திர தினத்திற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மகிழ்ச்சியாக சுதந்திர தினத்தைக் கொண்டாடுவதற்கான எவ்விதச் சூழலும் இலங்கையில்இல்லை என அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# சீனத்தயாரிப்பு பெட்டிகளுடன் தொடரூந்துகளை இயக்க முடியாது

## சாரதிகள் தீர்மானம்



(கொழும்பு)

தொடரூந்துகளை சீனப் பெட்டிகளுடன் செலுத்துவதில் இருந்து விலகுவதற்கு தொடரூந்து சாரதிகள் தீர்மானித்துள்ளனர்.

2009 ஆம் ஆண்டு 100 தொடரூந்தில்இணைக்க சீனாவில் இருந்து பெட்டிகள் இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட நிலையில் பல சந்தர்ப்பங்களில் அவற்றின் தடுப்பு கட்டமைப்பில் காணப்பட்ட கோளாறு காரணமாக போக்குவரத்து நடவடிக்கையில் பாதிப்பு ஏற்பட்டிருந்தது.

இவ்வாறான நிலையில் நாளாந்தம் 50 முதல் 60 சீன தொடரூந்து பெட்டிகள் வரையில் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன.

இது சிக்கலான செயற்பாடு என்பதால் சீனப் பெட்டிகளுடன் கூடிய தொடரூந்துகளை செலுத்துவதில் இருந்து விலகுவதற்கு தீர்மானித்துள்ளதாக தொடரூந்து சாரதிகள் சங்கத்தின் செயலாளர் இந்திக்க தொடங்கொட தெரிவித்தார்.

தடுப்பு கட்டமைப்பு செயற்படாமல் கடந்த 25 ஆம் திகதி களனிப் பகுதியில் தொடரூந்து ஒன்று நிற்காமல் சென்றதாகவும் அவர் குறிப்பிட்டார். (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## நம் வாழ்க்கை நம் கையில்!

பஞ்ச பாண்டவர்கள் ஐந்து பேர். அதிலே மூத்தவர் தருமர்.அவர் ஒரு நாள் வீட்டுத் திண்ணையிலே உட்கார்ந்திருந்தாராம்.அப்பொழுது தெருவில் ஒரு யாசகன் வந்திருக்கின்றான்.இவர் முன்னால் வந்து நின்று யாசகன் யாசகம் கேட்டிருக்கின்றான். அந்த சமயத்திலே தருமர் ஏதோ வேலையா இருந்திருக்கின்றார். அதனால் நாளைக்கு வா என்று சொல்லி அவனை அனுப்பி வைத்து விட்டார். அவனும் சரி என்று சொல்லிவிட்டு போய்விட்டான்.

பீமன் இதைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

உடனே என்ன செய்தான். தெரியுமா? ஒரு முரசை எடுத்துக் கொண்டு கிராமத்தை நோக்கி ஓடினான். முரசை அடித்துவிட்டு ஏதோ சொல்ல ஆரம்பித்து விட்டான் தருமருக்கும் இது தெரிந்தது. என்ன ஆகிவிட்டது உனக்கு? என்று கேட்டார்.

அதற்குப் பீமன் சொன்னார். நான் கிராம மக்களுக்கு என் அண்ணன் காலத்தை வென்றுவிட்டார் என்று சொல்லிவிடப் போகின்றேன் என்றான்.

ஏன் அப்படி சொல்லிப் போகின்றாய்? என்றார்.

நீங்கள் யாசகனை நாளைக்கு வரச் சொன்னீர்களே நீங்கள் நிச்சயமாக நாளைக்கு இருப்பீர்களா? அந்தப் யாசகனும் நாளைக்கு உயிரோடு இருப்பானா? நாளைக்கு நீங்கள் இருந்தாலும் யாசகம் போடும் மனோபாவம் உங்களுக்கு இருக்குமா? யாசகம் நிச்சயம் போடுவீர்களா? நாளை வரை அவன் யாசகனாகவே இருப்பான் என்பது நிச்சயமா? நாளைக்கு உங்கள் சந்திப்பு நிச்சயம் நடக்குமா?

நீங்கள் காலத்தை வென்று விட்டீர்கள்...அதனாலே தான் அவ்வளவு நிச்சயமாக நாளைக்கு வரச் சொல்லியிருக்கின்றீர்கள்.இது எவ்வளவு பெரிய விடயம்? நேரமாகிவிட்டது. நான் ஊருக்குள் போய் உடனே எல்லோருக்கும் இதைச்சொல்லி விடவேண்டும்.தாமதிக்க முடியாது. ஏன் என்றால் இந்த நேரம் போய்விட்டால் அடுத்த நாழிகை எனக்குக் கிடைக்கும் என்பது நிச்சயமில்லை. என்றான் பீமன்.

உடனே தருமர் சொன்னார். தம்பி கொஞ்சம் பொறு...நான் தவறு செய்து விட்டேன்..பரிபூரண சுதந்திரம் பெற்ற மனிதன் தான் அப்படிப் பேச முடியும். அப்படி வாக்குறுதி தரமுடியும்.அந்த யாசகனை இப்பொழுதே கூப்பிடு. ஏதாவது உடனே கொடுத்து அனுப்பி வைத்துவிடுகின்றேன்.. நாளைக்கு என்ன நடக்கும் என்று யாருக்குத் தெரியும்? என்றார்.

இதிலிருந்து நாம் என்ன தெரிந்து கொள்ள வேண்டும் என்றால் நிகழ் காலம் தான் எங்கள் கையில் இருக்கின்றது. அதைச் சரியாக பயன்படுத்திக் கொள்ள வேண்டியது எங்கள் பொறுப்பு.

ஒரு ஊரிலே ஒரு ஜோதிடர் இருந்தார். அவர் எதிர்காலத்தைப் பற்றியே அதிகமாக சொல்லிக் கொண்டு இருந்தார்.அவர் ஜோசியத்தைப் பொய்யாக்கி விடவேண்டும் என்று இரண்டு இளைஞர்கள் தீர்மானம் செய்தார்கள். அதற்காக ஒரு திட்டம் போட்டார்கள்.

அது குளிர்காலம். ஒரு இளைஞன் பெரிய கோட்டு ஒன்றை சட்டைக்கு மேலே போட்டுக் கொண்டான். அந்த மேல் கோட்டுக்குள்ளே, ஒரு புறாவை மறைத்து வைத்துக் கொண்டான்.இரண்டு பேரும் அந்த ஜோசியர் வீட்டுக்குப் போனார்கள். அவரைப் பார்த்தார்கள்.

இதோ பாருங்கள்..இந்தக் கோட்டுக்குள்ளே ஒரு புறாவை மறைத்து வைத்திருக்கின்றோம். அந்தப் புறா இப்பொழுது உயிரோடு இருக்கா..இறந்து போய்விட்டதா.. இதை நீங்கள் சொல்ல வேண்டும். சரியாக சொல்லிவிட்டால் உங்கள் ஜோசியத்தை நம்புகின்றோம்.. என்றார்கள்.

இவர்கள் மனதுக்குள்ளே என்ன திட்டம்.. என்றால் புறா உயிரோடு இருக்கு என்று சொல்லிவிட்டார் என்றால்.. அப்படியே கையாலே அமுக்கிக் கொன்று விடுவது.. செத்துவிட்டது என்று சொன்னார் என்றால் அப்படியே உயிரோடு எடுத்துக் காட்டி விடுவது. இது தான் அவர்கள் திட்டம். அவர் என்ன பதில் சொன்னாலும் அவர் சொல்வது பொய் என்று நிரூபித்துவிடலாம் என்பது அவர்கள் நம்பிக்கை.இந்த ஜோசியர் எந்த வகையிலும் தப்பிக்க முடியாது என்று நம்பினார்கள். ஆனால் அந்த ஜோசியர் சொன்ன பதில் அந்த இளைஞர்களைத் திகைக்க வைத்துவிட்டது. அவர் என்ன சொன்னார் தெரியுமா?

உங்கள் கோட்டுக்குள்ளே இருக்கின்ற புறா உயிரோடு இருக்கா செத்துப் போச்சா என்று தான் கேட்கின்றீர்களா? அது உங்கள் கையிலே இருக்கு.. அது சாகவும் இல்லை உயிரோடும் இல்லை.. அதன் வாழ்வும் சாவும் உங்கள் கையிலே தான் இருக்கு.. என்றார்.இந்த இளைஞர்கள் தோல்வியை ஒத்துக் கொண்டு தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு போய்விட்டார்கள்.

அதனால் எங்கள் வாழ்க்கை என்பது எங்கள் கையிலே தான் இருக்கு. நாம் நல்லா இருக்கிறதற்கும் அப்படி இல்லாமல் போவதற்கும் காரணம் நாம் தான்.

இதைப் புரிந்து கொண்டு ஒவ்வொரு விநாடியையும் அனுபவித்து வாழுவதற்குப் பழகிக் கொள்ள வேண்டும்.ஒரு வைத்தியசாலை படுக்கையிலே இருந்த நோயாளி சொன்னார். டாக்டர் என் வாழ்வும் சாவும் உங்கள் கையிலே தான் இருக்கின்றது. ஏன் என்றால் இப்பொழுது எனக்கு ஒப்ரேஷன் செய்யப் போறது நீங்கள் என்றார். பயப்படாதீர்கள்..எல்லாம் நாங்கள் பார்த்துக் கொள்கின்றோம்.. என்றார் அந்த டாக்டர்.

அதற்கில்லை டாக்டர் இதுவரைக்கும் நான் ஆஸ்பத்திரி பக்கமே வைத்தியத்திற்கு என்று வந்ததில்லை.. இது தான் எனக்கு முதல் ஒப்ரேஷன் அது தான் பயமாக இருக்கு.. என்றார் அவர். அதற்கு அந்த டாக்டர்.

எனக்கும் தான் இது முதல் ஒப்ரேஷன்..அதற்காக நான் என்ன பயப்படுகின்றேனா பாருங்கள் என்றார்.

# உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் தெரிவு முறையும் தேர்தல் நடைமுறைகளும் (2017 வரை)

14

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



வவுனியா மாவட்டத்தில் வவுனியா நகரசபைக்கும் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 12 உள்ளூராட்சிச் சபைகளுக்கும் (1 மாநகர சபை மற்றும் 11 பிரதேச சபைகள்), அம்பாறை மாவட்டத்தில் 16 உள்ளூராட்சிச் சபைகளுக்கும் (1 நகர சபை மற்றும் 15 பிரதேச சபைகள்), திருகோணமலை மாவட்டத்தில் 11 உள்ளூராட்சிச் சபைகளுக்கும் (1 நகர சபை மற்றும் 10 பிரதேச சபைகள்), உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக 1994ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதி தேர்தல்கள் நடத்தப்பட்டன.

வவுனியா நகரசபைத் தேர்தலில் 4179 (59.9%) வாக்குகளைப் பெற்ற ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணிக்கு (DPLF) 7 உறுப்பினர்களும் 1649 (23.6%) வாக்குகளைப் பெற்ற ஐக்கிய தேசிய கட்சிக்கு 2 உறுப்பினர்களும் 437 (6.3%) வாக்குகளைப் பெற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கு ஒரு உறுப்பினரும்713 (10.2%) வாக்குகளைப் பெற்ற தமிழ் ஈழவிடுதலை இயக்கத்திற்கு ஒரு உறுப்பினரும் கிடைத்தன. ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் தா.லிங்கநாதன் நகர சபையின் தவிசாளராகவும்வைபாலச் சந்திரன் நகர சபையின் துணைத் தவிசாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

1994 ஆம் ஆண்டில் வவுனியா மாவட்டத்தில் வவுனியா நகர சபைக்கும் கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சிச் சபைகளுக்கும் தேர்தல்கள் நடத்தப்பட்ட பின்னர் உள்ளூராட்சிச் சபைகளின் பதவிக் காலங்கள் மூன்று வகையாக இருந்தன.

**வகை-1:**-பதவிக்காலம் 1991 ஜுலை மாதம் முதலாம் திகதி ஆரம்பமானவை. 1991.05.11 ஆம் திகதி தேர்தல்கள் நடத்தப்பட்ட 237 உள்ளூராட்சிச் சபைகள் இவ் வகையில் அடங்கும். இந்த 237 உள்ளூராட்சிச் சபைகளின் (10 மாநகர சபைகள், 33 நகர சபைகள் மற்றும் 194 பிரதேச சபைகள்) பதவிக்காலம் முதலில் 1995.05.17 ஆம் திகதிய 871/9 இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் 1996-06-30 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது. பின்னர் புதிதாக உருவாக்கப்பட்ட பியகம பிரதேச சபை உட்பட 238 உள்ளூராட்சிச் சபைகளின் பதவிக்காலம் 1996.04.10 ஆம் திகதிய 918/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் 1996-12-31 ஆம் திகதி வரை பிற்போடப்பட்டது. அதன் பின்னும் இந்த 238 உள்ளூராட்சிச் சபைகளின் பதவிக்கால எல்லை 1997 ஏப்ரல் மாதம்14 ஆம்திகதிவரை பிற்போடப்பட்டதாக 1996.10.17 ஆம் திகதிய 945/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஜனாதிபதியால் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

**வகை-2:**-பதவிக்காலம் 1994 ஏப்ரல் மாதம் 04 ஆம் திகதி ஆரம்பமான கிழக்கு மாகாண உள்ளூராட்சிச் சபைகளும் வவுனியா மாவட்டத்தின் வவுனியா நகர சபையும் 1994 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதி தேர்தல்கள் நடத்தப்பட்ட 40 உள்ளூராட்சிச் சபைகள் இவ் வகையில் அடங்கும். இந்த 40 உள்ளூராட்சிச் சபைகளின் பதவிக்காலம் 809/1 இலக்க 1994-03-07 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் 1994 ஏப்ரல் மாதம் 04 ஆம் திகதி ஆரம்பமாகியது. இவற்றின் பதவிக்காலம் 1998-04-03 ஆம்திகதிமுடிவடையும்.

**வகை-3(1):**-பதவிக்காலம் 1983 ஆண்டுத் தேர்தலில் அல்லது 1987 ஆம் ஆண்டில் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளூராட்சிச் சபைகள். இவ் உள்ளூராட்சிச் சபைகளின் பதவிக்காலம் 1993-12-31இல் முடிவடைவதாயிருந்தும் அவற்றின் பதவிக்காலம் 1993.10.22ஆம் திகதிய 789/13ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் 1994-12-31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது. வட மாகாணத்தின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களின் உள்ளூராட்சிச் சபைகளின் பதவிக்காலம் ஆரம்பமாகும் திகதி 1996-01-01 எனத் தீர்மானிக்கப்பட்டது.

**வகை-3(2):**- 1987ஆம் ஆண்டில் நியமனங்கள் எவையும் கிடைக்கப்பெறாத உள்ளூராட்சிச் சபைகள் இவ்வகையில் அடங்கும். இவ் உள்ளூராட்சிச் சபைகளின் பதவிக்காலம் 1995-12-31 வரை நீடிக்கப்பட்டது. இவ்வடிப்படையில் வட மாகாணத்தின் எஞ்சிய 31 உள்ளூராட்சிச் சபைகளின் (வவுனியா நகர சபை தவிர) பதவிக்காலம் ஆரம்பமாகும் திகதி மேலும் 1996-01-01 க்குத் தள்ளிப் போடப்பட்டது.

வகை-3இல் கூறப்பட்ட உள்ளூராட்சிச் சபைகள் 1996-01-01 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவிருந்த போதும் இவற்றின் பதவிக்காலம் 1997.01.01 ஆம் திகதியே ஆரம்பிக்கப்பட வேண்டுமென 1995-10-13 ஆம் திகதிய 892/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் ஜனாதிபதி கட்டளையிட்டார். மீண்டும் 1996-10-16 ஆம்திகதிய 945/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் இப் பதவிக்காலம் 1997.04.01 ஆம் திகதியே ஆரம்பிக்கப்பட வேண்டுமென ஆணை பிறப்பிக்கப்பட்டது.

வடமாகாணத்தின் வவுனியா நகரசபை தவிர்ந்த 31 உள்ளூராட்சிச் சபைகளில் ஒரு மாநகர சபை, 03 நகர சபைகள், 23 பிரதேச சபைகள் என்பவற்றை உள்ளடக்கிய 27 உள்ளூராட்சிச் சபைகளுக்கு (முல்லைத்தீவு மாவட்ட பிரதேச சபைகளும் தவிர்ந்த) யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா மாவட்டங்களின் தெரிவத்தாட்சி அலுவலர்கள் (அரச அதிபர்கள்) மூலம் 1996. 11.27 ஆம் திகதி நியமனப் பத்திரம் கோரும் அறிவித்தல் பகிரங்கப்படுத்தப்பட்டது.

பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் 5ஆம் பிரிவின் கீழ் 1996.12.10 ஆம் திகதிய 953/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஆணைக்கிணங்க நியமனப்பத்திரம் கோரும் அறிவித்தல் இரத்துச் செய்யப்பட்டது.

### உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்-1997

கூட்டுறவுத்துறை, மாகாண சபைகள், உள்ளூராட்சி, சுதேச வைத்திய அமைச்சரினால், 1997.01.27 ஆம் திகதிய 960/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1996ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க அவசரகால (உள்ளூராட்சி பதவிக்காலம்) கட்டளைக்கிணங்க 1997 ஜனவரி 27ஆம் திகதியோடு பதவிக்காலம் வறிதான 12 மாநகர சபைகள், 31 நகர சபைகள், 195 பிரதேச சபைகளுக்கான (மொத்தம் 238) தேர்தலுக்காக 1997, ஜனவரி மாதம் 22ஆம் திகதி நியமனப்பத்திரங்கள் கோரப்பட்டன. அங்கீகரிக்கப்பட்ட 12 அரசியற் கட்சிகள் மூலம் 758 நியமனப்பத்திரங்களும் 202 சுயேட்சைக் குழுக்களால் 202 நியமனப்பத்திரங்களும் தாக்கல் செய்யப்பட்டன.

வாக்களிப்புக்காக 8,248 வாக்கெடுப்பு நிலையங்கள் பயன்படுத்தப்பட்ட இத் தேர்தலில் 9,737,970 பேர் வாக்களிக்க தகுதிபெற்றிருந்தனர். 77.2% வாக்குகள் அளிக்கப்பட்டிருந்ததோடு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் 3,567 ஆக இருந்தனர்.

இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இரண்டாம் முறையாக ஒரேநாளில் நடத்தி முடிக்கப்பட்ட பெரியளவிலான உள்ளூராட்சி மன்றத் தேர்தல் எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

**1997 ஜனவரி 27ஆம் திகதியோடு பதவிக்காலம் வறிதான 12 மாநகர சபைகள், 31 நகர சபைகள், 195 பிரதேச சபைகளுக்கான (மொத்தம் 238) தேர்தல் வேட்புமனுக்கள் 1997, பெப்ரவரி மாதம் 12 ஆம் திகதி வரையிலான காலப்பகு திக்குள் ஏற்றுக் கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து 1997, மார்ச் மாதம் 21 ஆம் திகதி குறித்த தேர்தல் நடத்தப்பட்டது. இந்த 238 உள்ளூராட்சிச் சபைகளினதும் பதவிக் காலம் 2001 ஏப்ரல் 14 ஆம் திகதி முடிவடையும்.**

1997 ஆம் ஆண்டில் 238 உள்ளூராட்சிச் சபைகளுக்கு தேர் தல்கள் நடத்தப்பட்ட பின்னர் உள்ளூராட்சிச் சபைகளின் பதவிக் காலங்கள் மூன்று வகையாக இருந்தன.

**வகை-1** பதவிக்காலம் 1991 ஜுலை மாதம் முதலாம் திகதி ஆரம்பமானவை. 1991.05.11 ஆம் திகதி தேர்தல்கள் நடத்தப்பட்ட 237 உள்ளூராட்சிச் சபைகள் இவ் வகையில் அடங்கும். இவற்றின் பதவிக்காலம் காலத்திற்கு காலம் நீடிக்கப்பட்டது. கடைசியாக இந்த 237 மற்றும் புதிதாக உருவாக்கப்பட்ட பியகம பிரதேச சபை ஆகிய உள்ளூராட்சிச் சபைகளின் பதவிக்கால எல்லை 1997 ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதிவரை பிற்போடப்பட்டதாக 1996.10.17 ஆம் திகதிய 945/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஜனாதிபதியால் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

அதன்பின்னர் 1997இல் கூட்டுறவுத் துறை, மாகாணசபைகள், உள்ளூராட்சி, சுதேச வைத்திய அமைச்சரினால் 1997.01.27 ஆம் திகதிய 960/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1996ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க அவசரகால (உள்ளூராட்சி பதவிக்காலம்) கட்டளைக்கிணங்க 1997 ஜனவரி 27ஆம் திகதியோடு இந்த 238 உள்ளூராட்சிச் சபைகளின் பதவிக்காலம் வறிதாக்கப்பட்டது.

1997.01.27ஆம் திகதி பதவிக்காலம் முடிந்த இந்த 238 உள்ளூராட்சிச் சபைகளுக்கும் 1997, பெப்ரவரி மாதம் 12ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் நியமனப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து 1997, மார்ச் மாதம் 21 ஆம் திகதி குறித்த தேர்தல் நடத்தப்பட்டது. இந்த 238 உள்ளூராட்சிச் சபைகளினதும் பதவிக்காலம் 2001 ஏப்ரல் 14 ஆம் திகதி முடிவடையும். (தொடரும்...)

## சர்வதேச நாடுகளின் விருப்பத்திற்கு எமது நாட்டை நிர்வகிக்க முடியாது

(கொழும்பு)

சர்வதேச நாடுகளின் விருப்பத்திற்கு எமது நாட்டை நிர்வகிக்க இடமளிக்க முடியாது என அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கடந்த நல்லாட்சி காலத்தில் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பொலிஸ் மற்றும் நீதிமன்றங்களுக்கு அழுத்தம் கொடுத்து எதிர்க்கட்சியினரை சிறைக்குள் தள்ளினர்.

இப்போது மனித உரிமை பற்றி பேசும் மனித உரிமை ஆணையாளர்கள் அதனை கண்டுகொள்ளவில்லை என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனிதவுரிமை ஆணையாளர் இலங்கைக்கு எதிராக முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பில் நேற்று முன்தினம் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இராணுவத்தினரின் நற்பெயருக்கு அகௌரவம் ஏற்படுத்தியது நல்லாட்சி அரசாங்கமே. அது புதியதல்ல. அரசியல் ரீதியான ஆணைக்குழுக்களை உருவாக்கியதும் நல்லாட்சி அரசாங்கமே.

அது தவறு என்பதாலேயே 69 இலட்சம் வாக்குகளை வழங்கி அந்த நிலையை மாற்றுவதற்கு மக்கள் ஆணை வழங்கியுள்ளனர்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன உருவாக்கிய அரசியலமைப்பில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்றுக்கொள்ள முடியாது என்றனர்.

எனினும் நாட்டுமக்கள் அதற்கான அதிகாரத்தை வழங்கி உள்ளனர். அந்த நிலையில் உலகில் வேறு எந்த நாடும் இலங்கையை நிர்வகிக்க இடமளிக்க முடியாது என ஜோன்ஸ்டன் தெரிவித்தார். (நி-4)

## ஆலய வழிபாடு ஏன்-எதற்கு - எப்படி



### இறை சக்தியை அதிகரிக்கும் கும்பாபிஷேகம்

(தொடர்ச்சி)

ஒவ்வொரு கிரியையும் பார்த்து பார்த்து பயபக்தியுடன் செய்தனர். கால சுழற்சியில் இந்த 55 கிரியைகள் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்தன.

என்றாலும் ஆகம விதிகளில் மாற்றம் ஏற்படவில்லை. சைவ சமயத்தில் மகா கும்பாபிஷேகத்துக்கான கிரியைகள் காமிகம், காரணம் போன்ற ஆகமங்களின்படி செய்யப்படுகிறது.

வைணவத்தலங்களில் வைகானச மற்றும் பாஞ்சராத்திர ஆகமங்களின்படி கும்பாபிஷேகம் நடைபெறும். சக்தித் தலங்களில் வேறுவிதமான ஆகம விதி கடைப்பிடிக்கப்படுகிறது.

அதிலும் குறிப்பாக காஞ்சிபுரம் காமாட்சி அம்மன் கோவிலில் "துர்வாச கல்பம்" என்ற விதிப்படி கும்பாபிஷேகம் நடத்தப்படுகிறது.

ஊருக்கு ஊர், நாட்டுக்கு நாடு கூட இவற்றில் மாற்றம் உள்ளது. கேரளாவில் வைதீக பிரதிஷ்டையே அதிகளவில் நடைபெறுகிறது.

எந்த ஆகம விதிப்படி நடத்தப்பட்டாலும் மந்திரம், கிரியை, பாவனை மாறாதது. ஆனால் இந்தக் கிரியைகளின் எண்ணிக்கைதான் மிகவும் குறைந்து போய்விட்டது.

நம் முன்னோர்கள் 64 விதமான கிரியைகளை நடத்தி முடித்து கும்பாபிஷேகம் செய்தனர். ஆனால் நாம் இன்று வெறும் 13 விதமான கிரியைகளைத்தான் கடைப்பிடித்து மகாகும்பாபிஷேகம் நடத்துகிறோம்.

அந்த 13 கிரியைகள் வருமாறு,

1.அனுக்ஞை, 2.விநாயகர் பூஜை, 3.வாஸ்து சாந்தி, 4.மிருதசங்கிரகணம், 5.அங்குரார்ப்பணம், 6.ரட்சாபந்தனம், 7.கும்பஸ்தாபனம், 8.கலா கர்சனம், 9.யாகசாலை, 10.அஷ்ட பந்தனம், 11.பிம்ப சுத்தி, 12.சபர்காஹூதி, 13.கும்பாபிஷேகம்.

இந்த 13 விதமான பணிகள் தொடங்கும் முன்பு முதல் நடவடிக்கையாக "பாலாலயம்" செய்வார்கள். அதாவது மூலமூர்த்தியை அல்லது மூலமூர்த்தியின் சக்தியை வேறு இடத்துக்கு மாற்றி விடுவார்கள். அந்த இடத்தை "இளங்கோயில்" என்பார்கள். நம் முன்னோர்கள் அதை "தருணாலயங்கள்" என்றனர்.

இந்தப் பணி முடிந்ததும் 13 கிரியைகள் தொடங்கும். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் முதலில் மூல பிம்பத்தில் இருந்து இறைசக்தியை கும்பத்துக்கு வரவழைப்பார்கள்.

பிறகு அந்தக் கும்ப நீர் யாகசாலையில் வைத்து பூஜிக்கப்பட்டு முழுசக்தி ஏற்றப்படும்.

அந்தக் கும்பத்தில் உள்ள இறை சக்தி மீண்டும் மூல பிம்பத்தில் ஏற்றப்படும். சக்திவாய்ந்த தர்ப்பைப்புல் மூலம் இறை சக்தியானது கும்பத்தில் இருந்து பிம்பத்துக்கு மாறும்.

குறிப்பிட்ட நாளன்று கும்பத்தில் உள்ள அதிசக்திவாய்ந்த நீரை ஆலய கருவறை விமானங்களிலும் மூலவர் சிலை மீதும் அபிஷேகம் செய்வார்கள்.

இந்தக் கும்ப நீர் அபிஷேகம்தான் கும்பாபிஷேகம் ஆனது. இந்தக் கிரியைகள் முடிந்ததும் 48 நாட்கள் மண்டல அபிஷேகம் நடைபெறும்.

இத்தகைய சிறப்புடைய கும்பாபிஷேகத்தில் பங்கேற்பது மிகுந்த புண்ணியத்தைத் தரவல்லது. ஆனால் கும்பாபிஷேகத்துக்கான 13 கிரியைகளிலும் பங்கெடுத்துக் கொள்வது நம் ஆத்மாவை மேம்படுத்தச் செய்யும். கும்பாபிஷேகத்துக்கு அடிப்படையான அந்த 13 கிரியைகள் பற்றி அடுத்து விரிவாகப் பார்க்கலாம். (முற்றும்)

## செய்தித்துளிகள்

### மேலும் சில பகுதிகள் விடுவிப்பு

(கொழும்பு)

மேல் மாகாணத்தின் சில பகுதிகளில் நேற்று தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

நாரஹேன்பிட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 100 ஆம் தோட்டம், துறைமுக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கீழ் புனித அன்ட்ரூஸ் பிளேஸ், மேல் புனித அன்ட் ரூஸ் பிளேஸ், அன்ட்ரூஸ் வீதி, பேலியகொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கங்கபட கிராம உத்தியோகத்தர் பிரிவின் 90 ஆம் தோட்டம் ஆகிய இடங்கள் நேற்று விடுவிக்கப்பட்டன என கொவிட் - 19 பரவலைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு மையத்தின் பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார். (நி-4)

### மேலும் 288 பேர் நாடு திரும்பினர்

(கொழும்பு)

வெளிநாடுகளில் நிர்க்கதிக்குள்ளாகியிருந்த மேலும் 288 இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

இதன்படி, குறித்த இலங்கையர்கள் நேற்று அதிகாலை 2 மணியளவில் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இவ்வாறு, நாடு திரும்பிய அனைவரும் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு இராணுவத்தினரால் அழைத்துச்செல்லப்பட்டுள்ளனர். (நி-4)

### நகர சபை தவிசாளர் பதவி நீக்கம்

(கொழும்பு)

2021 ஜனவரி 29 ஆம் திகதியுடன் அமுலுக்கு வரும் வகையில் தலவாக்கலை, லிந்துலை நகர சபையின் தவிசாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

இதற்கான வர்த்தமானி அறிவிப்பினையும் மத்திய மாகாண ஆளுநர் லலித் யு.கமகே வெளியிட்டுள்ளார். (நி-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 500 | 350 | 400 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 140 |
| பச்சைமிளகாய் | 800 | 750 | 900 |
| தக்காளி | 160 | 180 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 80 | 50 |
| கோவா | 80 | 90 | 100 |
| கரட் | 150 | 250 | 250 |
| பூசணி | 160 | 250 | 150 |
| புடோல் | 180 | 180 | 200 |
| வாழைக்காய் | 50 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 400 | 450 | 600 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 120 |
| பாகற்காய் | 350 | 300 | 500 |
| வெண்டிக்காய் | 200 | 180 | 240 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 120 |
| பயற்றங்காய் | 250 | 300 | 250 |
| லீக்ஸ் | 100 | 150 | 160 |
| பீற்றூட் | 200 | 280 | 250 |
| கறிமிளகாய் | 300 | 350 | 400 |
| முருங்கைக்காய் | — | — | — |
| போஞ்சி | 180 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 400 | — | 400 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 100 |
| தேசிக்காய் | 100 | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70-80 | 70-90 |
| இராசவள்ளி | 250 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 250 | 140 | 400 |
| முள்ளங்கி | 100 | 120 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 60 | 40 |
| வல்லாரை | 15 | 30 | 30 |
| ஈரப்பலா | 140 | 50 | 100 |



# சிறுவர் அரங்கம்

## எறும்புக்குப் பயந்த அரசர்

(நேற்றைய தொடர்ச்சி)

"அரசரைக் காப்பவருக்கு ஆயிரம் பொற்காசுகள் பரிசாக வழங்கப்படும்" என்று நாட்டு மக்களுக்கு முரசறிவிக்கச் சொன்னார்.

அரசருக்கு ஆலோசனை தர வந்தவர்கள் கோட்டை வாயிலில் கூட்டமாகத் திரண்டனர். ஒருவர், ஆயிரம் கிலோ எறும்புப்பொடி வாங்கி அரண்மனை அறைகளில் தூவி விடச் சொன்னார்.



மற்றொருவர், தண்ணீரை அடிக்கச் சொன்னார். மூன்றாமவர், எறும்புகளின் கண்களில் மிளகாய்ப் பொடி தூவ வேண்டுமென்றார்.

கடைசியாக ஒரு முதியவர் வந்தார். நீண்ட நாட்களாக அவருக்கு, நாட்டு மன்னனைத் தைரியமுள்ள வீரனாகப் பார்க்க ஆசை. அதை, மன்னனிடம் நேரடியாகச் சொன்னால் வம்பை விலைக்கு வாங்கியது போல் ஆகிவிடும். கடுமையான தண்டனைக்கு ஆளாக வேண்டும். மன்னன் குழம்பும் படியாக முதியவர் பேசினார்.

"எதிரி நாட்டு மன்னரின் ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் அதிக மலைகளும், காடுகளும் உள்ளன. அந்த நாட்டின் மீது படையெடுக்க வேண்டும்." என்றார்.

"முதியவரே! எறும்புக் கடியிலிருந்து தப்பிக்க வழி கேட்டால், எமனிடம் அனுப்ப வழி சொல்கிறீரே" என்றார் அரசர். முதியவர் சற்றும் தளராமல் பேசினார்.

"எதிரி நாட்டு மலை களிலும், காடுகளிலும் அதிகமான எறும்புத் தின்னிகள் உள்ளன. ஆகவே, எதிரி நாட்டின் மீது படையெடுத்து வென்று, எறும்புத்தின்னிகளைப் பிடித்து வர வேண்டும்." என்று திட்டவட்டமாகச் சொன்னார்.

ஒரு நாள் கழித்து, முதியவரை அரசர் அழைத்து வரச் சொன்னார். தமக்கும், படை வீரர்களுக்கும் அவரையே போர்ப் பயிற்சி தரும்படிக் கேட்டார். தண்ணீரில் பத்திரமாக நின்றிருந்த மன்னருக்குப் போர்ப் பயிற்சி தரப்பட்டது.

எதிரி நாட்டின் மீது படையெடுக்கப் போவதாய் ஓலை அனுப்பப்பட்டது. போரும் நடந்தது. கடியூர் அரசர் வெற்றி பெற்றார். அந்த நாட்டின் காடுகளிலிருந்து எறும்புத் தின்னிகளைப் பிடித்து வந்தனர்.

அவை ஒவ்வொன்றும் பதினாறு அங்குல நாக்கை நீட்டி, அரண்மனைக்குள் ஓடின. எறும்புகள், அவைகளின் நாக்கில் ஒட்டிக் கொண்டன. ஒரு எறும்புத்தின்னி, கால் கிலோ எறும்புகளை விழுங்கித் தீர்த்தது.

எறும்புத்தின்னிகளின் உடம்பிலிருந்த அடுக்கடுக்கான பட்டைகள், இயற்கை தந்த கேடயமாக இருந்தன. துப்பாக்கிக் குண்டுகூட துளைக்க முடியாத உடம்பை, எறும்புகளால் கடிக்க முடியவில்லை.

கொஞ்சம் கொஞ்சமாக, எறும்புகள் காலியாயின. அரசர் வெற்றியைக் கொண்டாடினார். கடியூர் நாட்டுக்கொடியில் எறும்புத்தின்னி இடம் பெற்றது.

அதன் பிறகுதான் எறும்புகள் அரண்மனைக்குள் ஏன் புகுந்தன என்ற விடயத்தையும் அரசர் தெரிந்துகொண்டார்.

அன்று முதல் எறும்புகளை மட்டுமல்ல எல்லா உயிர்களிடமும் அன்பு காட்டத் தொடங்கினார். ஒரே சமயத்தில் அரசரை நல்லவராகவும், முழு வீரராகவும் பார்த்த முதியவர் மகிழ்ச்சியடைந்தார்.

(முற்றும்)

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## காதலும் கனவும்




என்ன ஒன்று. இந்தியாவுக்கென பிரத்தியேகமான போர் முறைகளை வகுக்க வேண்டும்.

ஒவ்வொரு நாடாகக் கைப்பற்ற வேண்டும். அங்கு சட்டம் ஒழுங்கைச் செம்மைப்படுத்திய பிறகே அந்த நாட்டுக்குப் புறப்பட வேண்டும்.

அதன்பிறகு கலகம் எதுவும் ஏற்படக்கூடாது. அதை உறுதி செய்து கொண்ட பிறகு தான் முன்னேற வேண்டும்.

அந்தந்த நாடுகளில் ஒற்றர்களை நியமனம் செய்து அவ்வப்போது நாடுகளில் நிலவும் சூழ்நிலைகளைத் தெரிந்து கொள்ள ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

ஒரு பெரும்படையை நாட்டின் மையப்பகுதியில் நிறுத்திவைக்க வேண்டும்.

எந்த இடத்தில் ஆபத்து அதிகமாக இருக்கிறதோ அந்த இடத் துக்கு உடனடியாக படை வந்து சேரும் வகையில் அது இருக்க வேண்டும்.

இவையெல்லாம்தான் இந்தியப் படையெடுப்புக்காக அலெக்சாண்டர் கண்டுபிடித்த புதிய அணுகுமுறைகள். தன்னுடைய கனவு தேசத்திற்காக கரங்களை விட மூளைக்கு அதிக வேலையைக் கொடுத்திருந்தார் அலெக்சாண்டர்.

மூளைக்குத் தேவையான உற்சாகத்தைக் கொடுக்க கூடவே ராக்சேனாவையும் இந்தியாவுக்கு அழைத்துக் கொண்டார் அலெக்சாண்டர்.

கி.மு. 327. இந்துகுஷ் மலைத் தொடரைக் கடக்கும் முயற்சியில் மாசிடோனியப் படைகள் ஈடுபட்டிருந்தன. மாபெரும் மலைத் தொடர்.

அதைக் கடக்க வேண்டும் என்றால் நிறைய இழப்புக்களைச் சமாளிக்க வேண்டும் என்பது புரிந்தது. அது போலவே நிறையச் சிக்கல்கள், உயிர்ப்பலிகள்.

ஒவ்வொன்றாகச் சமாளித்து முன்னேறிக் கொண்டிருந்தது அலெக்சாண்டரின் படை. ஒருவழியாக காபூலை அடைந்தார்கள்.

சுற்றும் முற்றும் பார்த்தார் அலெக்சாண்டர். கண்களாலேயே நிலப்பகுதியை அளந்துவிடக் கூடியவர். சில நிமிடங்கள் ஆழமாக யோசித்தார்.

(தொடரும்)

கேடு வருமா என்று கேட்பது கோழைத்தனம்; புகழ் வருமா என்று கேட்பது தற்பெருமை; ஆனால் மனச்சான்றோ, அறம்தானா என்றே கேட்கும். – *புன்ஷன்*

வலம்புரி

TP: 021 222 3378

website : www.valampurii.lk

## இலக்கு வைக்கப்படும் தொன்மைமிகு சிவாலயங்கள்

ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெரும் சோதி எனச் சிவப்பரம்பொருளை விழித்துப் பாடுவார் மாணிக்கவாசகர்.

ஆதியும் அந்தமும் இல்லாத சிவன் சைவ சமயத்தின் முழுமுதற் கடவுள்.

பிறவா யாக்கைப் பெரியோன் என்று போற்றப்படுகின்ற சிவனின் அடையாளங்களே சிந்துவெளி அகழ்வாராய்ச்சியில் கிடைத்தன.

ஆக சிவவழிபாடு மிகத் தொன்மையானது என்பது இதிலிருந்து நிரூபணமாகிறது.

தவிர, நடராஜ மூர்த்தம் இந்த உலகப் பிரபஞ்சத்தின் இயங்குநிலைக்கானது.

ஆம், இந்தப் பூமியின் மையப் புள்ளியைத் தேடி ஆராய்ந்த விஞ்ஞானிகள் ஒரு பெரும் உண்மையைக் கண்டறிந்தனர்.

இந்தப் பூமியின் மையப் புள்ளி இந்தியாவின் மாநிலமாகிய தமிழகத்தில் தில்லை எனப் போற்றப்படும் சிதம்பரத்தில் பொற்சபைதனில் நடம் புரியும் தில்லை நடராஜப் பெருமான் கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் திருத்தலத்தின்கண் பூமியின் மையப் புள்ளி அமைந்துள்ளது என்பதை உறுதி செய்தனர்.

இதேபோல இராஜராஜசோழன் கட்டிய தஞ்சைப் பெருங்கோயில் எனப் போற்றப்படும் பிரகதீஷ்வரர் ஆலயக் கோபுரத்தின் நிழல் பூமியின் கண்படாத அதிசயம் இன்னமும் ஆய்வுக்குரியதாக நீண்டு செல்கிறது.

நிலைமை இதுவாக இருக்கையில், இலங்கையில் திருக்கோணேச்சரம் இலங்கை வேந்தன் இராவணேஸ்வரனால் அமைக்கப் பெற்றது.

தவிர திருக்கோணேச்சரம், திருக்கேதீஸ்வரம் ஆகிய சிவத்தலங்கள் பாடல் பெற்ற வரலாற்றுத் தொன்மைமிக்க சிவாலயங்கள்.

இதுபோல கீரிமலை நகுலேஸ்வரம் புராதன வரலாற்றின் பொக்கிசம்.

ஆக, வரலாற்றுத் தொன்மைமிக்க சிவாலயங்கள் இலங்கையில் அமையப் பெற்றிருப்பது; சிவபூமி எனப் போற்றப்படும் இலங்கையின் ஆதிக்குடிகள் தமிழர் என்பதை வரலாற்று ரீதியில் நிரூபிப்பதற்குச் சான்றாதாரமாக அமைகிறது.

இத்தகைய ஆதாரங்கள், இலங்கை பௌத்த சிங்கள நாடு என்று எடுத்துரைப்பதற்குத் தடையாக அமையும் என்ற காரணத்தால், எங்கெல்லாம் வரலாற்றுத் தொன்மைமிக்க சிவாலயங்கள் இருக்கின்றனவோ அவற்றையெல்லாம் ஆக்கிரமித்து பௌத்த விகாரைகளை அமைத்து குறித்த இடம் பௌத்தத்துக்குரியவை என்று ஆதாரப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

இதன் அடிப்படையிலேயே செம்மலையில், கன்னியாவில், காங்கேசன்துறையில், குருந்தூர்மலையில், உருத்திரபுரத்தில் என சிவாலய பிரதேசங்களில் தொல்லியல் திணைக்களம் நிலத்தைத் தோண்டி பௌத்த அடையாளங்களைத் தேடுகின்றன.

இப் பெரும் அநியாயச் செயல் தடுக்கப்படாவிட்டால், வரலாற்றுத் தொன்மைமிக்க எம் சிவாலயங்கள் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போவதை யாராலும் தடுக்க முடியாது.

# சுதந்திரதினம் எமக்கு கரிநாள்

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள்

(முறிகண்டி)

**இலங்கையின் சுதந்திர தினத்தை கரிநாளாகவும் கறுப்புப்பட்டி அணிந்து இன்று 2 ஆம் திகதியிலிருந்து 6 ஆம் திகதி வரையில் அடையாள உண்ணாவிரதமாக கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் போராட்டத்திற்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் அழைப்பு விடுத்துள்ளனர்.**

வடக்கு- கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் குறித்த அழைப்பு நேற்று விடுக்கப்பட்டது. கிளிநொச்சியில் அமைந்துள்ள வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளது அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் இணைப்பாளர் கதிர்காமநாதன் கோகிலவாணி கருத்து தெரிவிக்கையில்,

எதிர்வரும் 4 ஆம் திகதி இலங்கையின் சுதந்திர தினத்தை கரிநாளாகவும் அனுஷ்டிக்கும் வகையில் கறுப்புப்பட்டி அணிந்து அடையாள உண்ணாவிரதப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. குறித்த போராட்டமானது கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் இடம் பெறவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை எதிர்வரும் 3 , 4 ஆம் திகதிகளில் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் தெரிவித்திருந்தனர்.

குறித்த போராட்டத்திற்கு வர்த்தக சங்கங்கள், முச்சக்கரவண்டி சங்க உறுப்பினர்கள், பேருந்து உரிமையாளர் சங்க உறுப்பினர்கள், தமிழ் உறவுகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (5-100)

# கிழக்கு முனையம் துறைமுக அதிகார சபையின் கீழ் பராமரிக்கப்படும்

## பிரதமர் உறுதி

(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் முழுமையாக துறைமுக அதிகார சபையின் கீழ் பராமரிக்கப்படும் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். இலங்கை சுதந்திர சேவையர் சங்கத்தின் தலைவர் பிரசன்ன கலுதரகே இதுகுறித்த தகவலை வெளியிட்டுள்ளார்.

கொழும்பு துறைமுக கிழக்கு முனையத்தை பாதுகாக்கும் தொழிற்சங்க கூட்டு மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்குமிடையில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனுடன் தொடர்புடைய அமைச்சரவைப் பத்திரத்தை உடனே அமைச்சரவையில் சமர்ப்பிக்கவுள்ளதாக பிரதமர் உறுதியளித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"குறித்த அமைச்சரவைப் பத்திரம் தொடர்பான அறிவிப்பு இன்று கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம். பிரதமர் எமக்கு வழங்கிய உறுதிமொழி நிறைவேற்றப்படும் என நம்புகின்றோம்.

குறித்த உத்தியோக பூர்வ அறிவிப்பு வரும் வரையில் நாம் தொழிற்சங்க போராட்டத்தை கைவிடப்போவதில்லை. இன்று உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியான பின்னர் தொழிற்சங்க போராட்டம் கைவிடப்படும்.

குறித்த அமைச்சரவைத் தீர்மானத்தில் வேறு விடயங்கள் இருந்தால் எமது தொழிற்சங்க போராட்டத்தை கைவிடமாட்டோம்" எனத் தெரிவித்துள்ளார். (நி-4)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 3 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணிவரை

**யாழ்.பிரதேசத்தில்** இணுவில் கந்தசாமி கோவில், இணுவில் மேற்கு, பாலாவோடை, வியாபாரிமூலை, நாவலடி, இன்பருட்டி, திக்கம், பாரதிதாசன் சனசமூக நிலையம், முத்துமாரி அம்மன் கோவில், சுப்பர்மடம் மரின்வெல்த் ஐஸ்தொழிற் சாலை, பத்தனை, தாவடி மானிப்பாய் வீதி, தாவடி இந்து மயானம் ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** தாண்டிக்குளம் கிராமம், புதிய சின்னக்குளம் கிராமம், சமணன்குளம் கிராமம் ஆகிய இடங்களிலும்,

**மன்னார் பிரதேசத்தில்** சின்னப்பண்டிவிரிச்சான், பெரிய பண்டிவிரிச்சான், வீரபுரம், மடு வீதி, பூமலர்ந்தான், கற்கிடந்தகுளம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## தெய்வத்திற்கு மிஞ்சிய சக்தியில்லை

❖ மக்கள் உன்னை புகழ்ந்தாலும் சரி, இகழ்ந்தாலும் சரி, கடவுள் உனக்கு அருள் புரிந்தாலும் சரி, புரியாமல் போனாலும் சரி... உன் உடல் இன்றைக்கே வீழ்ந்து போவதாக இருந்தாலும் சரி... உண்மை என்னும் பாதையிலிருந்து மட்டும் அணு அளவு கூட மாறிச்சென்று விடாதே.

❖ உங்களுக்குள்ளேயே தெய்வீகத் தன்மை ஒளிந்து கிடக்கிறது. அதை எடுத்துச் சொல்வதும், வாழ்க்கையின் ஒவ்வொரு இயக்கத்திலும் அதை எப்படி வெளிப்படுத்திக் காட்டுவது என்பதும் தான் முக்கியம்.

❖ "உதவி" என்ற சொல்லை உனது உள்ளத்திலிருந்தே விலக்கிவிடு. நீ உதவி செய்ய முடியாது. அப்படி நீ நினைப்பது தெய்வத்தைக் குறை கூறுவதாகும். தெய்வத்தின் விருப்பத்தினால் தான் நீ இங்கு இருக்கிறாய். தெய்வத்தை வழிபடத்தான் முடியுமே தவிர, தெய்வத்துக்கு உதவி செய்வதாகக் கூறுவது தவறாகும். தெய்வத்திற்கு மிஞ்சிய சக்தியில்லை.

# உயிர் பல்வகைமை நிறைந்த ஈரநிலங்கள்

ஈரநிலங்கள் எனப்படுபவை நிரந்தரமாக அல்லது பருவகாலமாக நீரினால் நிறைவுற்ற அல்லது வெள்ள நீர் நிறைந்த நிலப்பரப்புகளாகும். அதாவது இயற்கையான சூழலில் அமைந்துள்ள வருடம் முழுவதும் நீரினால் மூழ்கியுள்ள பிரதேசம் அல்லது காலத்திற்குக் காலம் நீரினால் மூழ்கும் பிரதேசங்கள் "ஈரநிலங்கள்" என்று அழைக்கப்படுகின்றன. இவை புவிமேற்பரப்பில் பல்வேறுபட்ட அங்கிகளுக்கு ஆதாரமாக விளங்குவதோடு இயற்கைச் சமநிலையைப் பேணும் ஒரு களமாகவும் தொழிற்படுகின்றன.

### உலக ஈரநில தினம்


ஈரான் நாட்டின் முக்கிய நகரங்களில் ஒன்றான "ரம்சார்" நகரின் கஸ்பியன் கடலின் கரையில் 1971 ஆம் ஆண்டு ஒரு சர்வதேச உடன்பாடு எட்டப்பட்டது. அதுவே "ஈரநில உடன்படிக்கை" ஆகும். பூமியின் மொத்த நிலப்பரப்பில் 6 சதவீதமாக உள்ள ஈரநிலங்களைப் பாதுகாத்துக் கொள்ளவென ஏற்படுத்தப்பட்ட இந்த உடன்படிக்கையே "ரம்சார் உடன்படிக்கை" என்று பிரபல்யம் பெற்றுள்ளது. 1972 ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட இந்த உடன்படிக்கை சர்வதேச பிரஜைகளின் கவனத்தை ஈர்க்க 1997 ஆம் ஆண்டு அதனை "உலக ஈரநில தினம்" என பிரகடனப்படுத்தப்பட்டது. அன்று முதல் ஒவ்வொரு ஆண்டும் பெப்ரவரி 2 ஆம் திகதியில் உலக ஈரநில தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

2021 ஆம் ஆண்டினுடைய உலக ஈரநில தினத்தின் சர்வதேச ஆய்வுப் பொருள் "ஈரநிலங்களும் நீரும்" **(Wetlands and water)** என்பதாகும்.

ஈரநிலங்களில் பலதரப்பட்ட உயிரினங்களைக் காண முடியும். பல ஈரநில உயிரினங்களுக்கு இப்பிரதேசங்கள் இருப்பிடமாக இருப்பதே இதற்குக் காரணமாகும். அங்கு வசிக்கும் உயிரினங்களுக்கும் வசிக்காத உயிரினங்களுக்கும் தேவையான உணவுகள் ஈரநிலங்களில் காணப்படுகின்றன. மண்ணில் காற்றுக் குறைவடையும் போது அதற்கு ஈடுகொடுக்கும் வகையிலான விசேட ஏற்பாடுகள் இங்குள்ள தாவரங்களில் உண்டு. நன்னீரிலும் களப்பிலும் வசிக்கும் நத்தைகள், வண்ணத்துப்பூச்சிகள், இறால்கள், சிங்கி இறால்கள், மீனினங்கள், பட்சிகள், பாலூட்டிகள், ஈருடகவாழிகள், ஊர்வன என்பனவும் ஈரநிலங்களுக்கு உரியனவாகும். ஈரநிலங்கள் சுற்றுலாப் பறவைகளுக்கும் தற்காலிக இருப்பிடமாக உள்ளன. ஈரநிலங்கள் தமது அங்கிகளுக்கு சிறந்த வாழ்கைத் தரத்தை வழங்குவதோடு அவற்றின் செயற்பாடுகளையும் விருத்தி செய்து பேணுகின்றன. இதன்மூலம் அங்கிகளின் பல்லினத்தன்மை அதிகரிக்கப்பட்டு அங்கிகளுக்கிடையே இயற்கைச் சமநிலை பேணப்பட்டு உயிர்ப்பல்வகைமை பாதுகாக்கப்படுகின்றது.

### ஈரநிலங்களின் பரம்பல்

உலகில் ஈரநிலங்களின் பரம்பலானது இடத்திற்கு இடம் வேறுபட்டுக் காணப்படுகின்றது. அதாவது அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளிலேயே இவை அதிகமாகக் காணப்படுகின்றன. குறிப்பாக இலங்கை, இந்தியா, பங்களாதேஷ் போன்ற நாடுகளில் அதிக ஈரநிலங்கள் பரம்பிக் காணப்படுகின்றன. இவற்றினைத் தவிர ஐக்கிய அமெரிக்கா, கனடா, அலாஸ்கா, ஆபிரிக்கா, தென் மத்திய பிரேசில் போன்ற நாடுகளிலும் ஓரளவிற்குப் பரம்பிக் காணப்படுகின்றன. உலகிலேயே மிகப்பெரிய ஈரநிலங்கள் காணப்படும் இடமாக தென் மத்திய பிரேசிலில் காணப்படுகின்றது. பங்களாதேஷில் காணப்படும் ஈரநிலங்களை "சந்தர்பண்டஸ்" என சிறப்பாக அழைக்கின்றனர். இலங்கையிலும் பல்வேறு வகையான ஈரநில வகைகள் காணப்படுகின்றன.



உலக ஈரநில தினம் இன்று

### ஈரநிலங்களின் முக்கியத்துவம்

பல்வேறு வகையான முக்கியத்துவம் வாய்ந்த ஈரநிலங்கள் மனிதனுக்குப் பல்வேறு வழிகளில் பயன்பட்டு வருகின்றன. இவை சில வேளைகளில் மனிதனுக்கு நேரடியாகப் பயன்படுகின்ற அதேவேளை மறைமுகமாகவும் சில சமயங்களில் பயன்பட்டு வருகின்றன. பொதுவாக ஈரநிலங்களின் பயன்பாட்டினை பொருளாதார, சமூக, கலாசார முக்கியத்துவங்கள் என பிரித்து நோக்கலாம்.

பொருளாதார முக்கியத்துவம் என்பதனுள் மீன்பிடி, நீர்மின் உற்பத்திகள், போக்குவரத்து, கைத்தொழில் விருத்தி, விவசாயம் போன்றன உள்ளடங்குகின்றன. 75 வீதமான மீன்பிடி நடவடிக்கைகள் ஈரநிலங்களில் மேற்கொள்ளப்படுகின்றன. இதனால் மக்களிடையே புரத உணவுத்தேவையை நிறைவேற்றுவதுடன் வேலைவாய்ப்புக்களையும் விஸ்தரித்து பொருளாதாரத்தையும் வளர்ச்சியடைய வைக்கிறது.

ஈரநிலங்களின் சமூக, கலாசார முக்கியத்துவம் என்னும் போது இவை மக்களிடையே அழகியல் தன்மையை ஏற்படுத்துவதோடு சுற்றுலாப் பயணம், ஆய்வு நடவடிக்கைகள், கல்வி நடவடிக்கைகள் போன்றவற்றையும் விருத்தி செய்கின்றது.

### இலங்கையில் ஈரநிலங்கள்

இலங்கையில் பலதரப்பட்ட ஈரநிலங்களைக் காண முடியும். இவற்றுள் "ரம்சார் ஈரநிலங்கள்" என்று பெயரிடப்பட்ட ஈரநிலங்களும் உள்ளடங்குகின்றன. நமது நாட்டில் ஈரநிலங்களைப் பிரதானமாக இயற்கை ஈரநிலம், செயற்கை ஈரநிலம் என இரண்டாக வகுக்கலாம். இவ்விரண்டையும் நன்னீர் ஈரநிலம், உவர் நீர் ஈர நிலம், சவர்நீர் ஈரநிலம் என்று மேலும் மூன்று பிரிவுகளாகப் பிரித்தறிய முடியும். 2013 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் வரையில் இலங்கையில் ஆறு ஈரநிலங்கள் ரம்சார் ஈரநிலங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. அவை,

பூந்தல தேசியவனம், ஆனவிழுந்தாவ வாவிகள் தொகுதி (சரணாலயம்), மாதுகங்கை, குமண குடும்பிகல சரணாலயம், வங்காலை சரணாலயம், வில்பத்து சரணாலயம் என்பனவாகும்.

ரம்சார் ஈரநிலமாக பிரகடனப்படுத்தப்பட்ட இலங்கையின் முதலாவது தேசிய வனமாக பூந்தல தேசிய வனவியில் பூங்கா கருதப்படுகின்றது. அதாவது 1993 ஜனவரி 4 ஆம் திகதி இந்த வனப்பகுதி தேசிய வனவிலங்கியல் பூங்காவாக பிரகடனப்படுத்தப்பட்டது. இது 6216 ஹெக்டேயர் பரப்பினைக் கொண்டுளளது. இங்கு அழகிய ஏரிகள் மற்றும் களப்புக்கள் என்பன அமைந்துள்ளன. பூந்தல களப்பு, எம்பிலிகல களப்பு, மஹாயேவாய மற்றும் கொஹொலங்கல களப்பு என்பன இவற்றுள் பிரதானமானவையாகும். இது ஈரநிலமாக மட்டுமன்றி பறவைகளின் சொர்க்காபுரியாகவும் பிரசித்தி பெற்றுள்ள இப்பகுதியில் உயிர் பல்வகைமைத் தன்மை மிகவும் அதிகமாக உள்ளது. பூந்தல வனப்பகுதியை தமது வாசஸ்தலமாக்கிக் கொண்ட உயிரினங்களில் இலங்கைக்கேயுரிய 11 பறவையினங்கள், 15 ஈரூடக வாழிகள், 48 ஊர்ந்து செல்லும் உயிரினங்கள், 197 பறவைகள், 52 பாலூட்டி இனங்கள் என்பன உள்ளடங்குகின்றன. பருவகாலங்களுக்கு ஏற்ப வெளிநாட்டுப் பறவைகளும் இங்கு வருகின்றன.

பதினேழு தீவுகளைக்கொண்ட கண்டல் தாவரங்களால் சூழப்பட்ட மாதுகங்கை ஈரநிலமானது 2003 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 11 ஆம் திகதி சர்வதேச ரம்சார் ஈரநிலப் பகுதியாக பிரகடனப்படுத்தப்பட்டது. இது 915 ஹெக்டேயர் பரப்பினைக் கொண்டுள்ளது. இலங்கையில் அசுத்தமடையாத கண்டல் தாவரங்கள் உள்ள பகுதியாக இப்பகுதியைக் கருத முடியும். 95 தாவர இனத்திற்குரிய 303 உப இனங்களும் 248 உயிரினங்களும் மாதுகங்கைப் பகுதியில் உள்ளன. இவை தவிர முதலைகள், மீன் இனங்கள், பறவைகள், பாலூட்டி இனங்கள் பலவும் இப்பகுதியில் உள்ளன. சூழலியலாளர்களின் மனதைப் பெரிதும் கவர்ந்த இடமாக மாதுகங்கை ஈரநிலம் திகழ்கின்றது.

2001 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த ரம்சார் ஈரநிலமாக ஆனவிழுந்தாவ ஈரநிலம் பிரகடனப்படுத்தப்பட்டது. 1397 ஹெக்டேயர் பரப்பளவை இது உள்ளடக்கியுள்ளது. இது பல வாவிகளை உள்ளடக்கிய ஒரு பிரதேசமாகும். இலங்கையில் உள்ள நன்னீர் மீன் இனங்களில் 50 சதவீதமானவை ஆனவிழுந்தாவ வாவிகள் தொகுதியில் வசிக்கின்றன. இதனைத் தவிர 22 நீரியல் தாவரங்கள், 264 வகையான பிற தாவரங்கள், மருத்துவ நலன்மிக்க தாவரங்கள், இலங்கைக்கே தனித்துவமான தாவரங்கள் போன்றனவும் இங்கு காணப்படுகின்றன.

2010 ஆம் ஆண்டு ஒக்டோபர் 29 ஆம் திகதி குமண-குடும்பிகல சரணாலயம் ரம்சார் ஈரநிலமாக பிரகடனப்படுத்தப்பட்டது. 200 ஏக்கர் நிலப்பரப்பினைக் கொண்ட இந்த வனப்பகுதியானது இயற்கையான சதுப்பு நிலங்கையும் கண்டல் காடுகளையும் மேலும் சில விசேட தாவர வகைகளையும் கொண்டதாக விளங்குகின்றது. யால தேசிய வனத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள இந்த வனப்பகுதி பறவைகள் சரணாலயமாகவும் பிரசித்தி பெற்றுள்ளது. இலங்கையில் வசிக்கும் 50 சதவீதமான பறவைகளை இங்கு காண முடியும். இதனைத்தவிர 30 வகையான நீர்வாழ் சுற்றுலாப் பறவைகள் இந்த சரணாலயத்திற்கு வருகை தருகின்றன. மே, ஜூன் மாதங்களில் நீர்வாழ் பறவைகளின் கூடுகளை பெருமளவில் இங்கு காண முடியும். அத்துடன் 11 வகையான ஊர்வனவற்றையும் காண முடியும். இவற்றுள் ஆமைகள் முக்கியமானவை.

முட்புதர்கள் கொண்ட அடர்ந்த காடுகள், கடற் புல்வெளிகள், களப்புகள், கண்டல் காடுகள், உவர்நீர் சதுப்பு நிலங்கள், ஆழமற்ற கடல் பகுதி, மணல் குன்றுகள் ஆகிய சூழல் தொகுதிகளைக் கொண்ட வங்காலை சாரணாலயம் (மன்னார்) 2010 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 12 ஆம் திகதி சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த ரம்சார் ஈரநிலமாக பிரகடனப்படுத்தப்பட்டது. இந்த சரணாலயமானது 4839 ஹெக்டேயர் பரப்பளவைக் கொண்டுள்ளது. சரணாலயத்தின் கடல் மற்றும் கடற்கரை சார்ந்த சுற்றாடல் தொகுதிகளில் 60 வகையான மீன் இனங்கள், கடல் ஆமைகள், டுகான் பறவைகள் போன்ற அரிய வகை உயிரினங்களையும்காண முடியும். இப்பகுதி தொல்லியல் ரீதியில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாகும்.

1938 இல் வில்பத்து மிகவும் பெரிய சரணாலயமாக பிரகடனப்படுத்தப்பட்டாலும் 2013 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதியே சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த ரம்சார் ஈரநிலமாக பிரகடனப்படுத்தப்பட்டது. இது 131,693 ஹெக்டேயர் பரப்பளவை உள்ளடக்கியுள்ளது. இங்கு உலர் வலயத்திற்குரிய சுற்றாடல் இயல்புகளையே காண முடியும். யானை, சிறுத்தை, கரடி போன்ற விலங்குகள் இங்கு வசிக்கின்றன. இந்த ஈரநிலத்தைச் சூழவும் பூக்காத தாவரங்கள் பலவற்றைக் காண முடியும்.

### ஈரநிலங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்


கலாநிதி திருமதி.சுபாஜினி உதயராசா தலைவர், சிரேஷ்ட விரிவுரையாளர் புவியியற்றுறை யாழ்.பல்கலைக்கழகம்.

உலக மக்களுக்கு ஏராளமான நன்மைகளை செய்துவரும் ஈரநிலங்கள் பல்வேறு வகையான பிரச்சினைகளையும் எதிர்கொண்டு வருகின்றன. குறிப்பாக உலகில் அதிகரித்து வரும் சனத்தொகை காரணமாக ஈரநிலங்கள் சம அளவிலும் பரம்பலிலும் பல்வேறு மாற்றங்களையும் பிரச்சினைகளையும் எதிர்நோக்கி வருகின்றன. இதன் காரணமாக ஈரநிலங்கள் தற்போது அழிவடைந்து கொண்டும் மாசடைதலுக்கு உட்பட்டும் வருகின்றன. மிதமிஞ்சிய நீர்ப்பாவனை, நீரின் தரத்தில் ஏற்படும் மாற்றங்கள் குறிப்பாக உவர்த்தன்மை அதிகரிப்பு, அளவிற்கு அதிகமான மீன்பிடி, பொருத்தமற்ற மீன்பிடி முறைகள், பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களுக்காக நிலம் நிரப்பப்படுதல், முருகைக்கல்பாறை அகழ்தல், சிப்பி அகழ்தல், மண் அகழ்தல், விவசாயத்திற்கு மிதமிஞ்சி உரமிடல், நகரசபைக் கழிவுகள், கைத்தொழிற்சாலைக் கழிவுகள், திட்டமிடப்படாத நிலப் பயன்பாடுகள் போன்ற செயற்பாடுகளினால் ஈரநிலங்கள் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றன.

### ஈரநிலங்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களை தவிர்ப்போம்

இயற்கையின் சமநிலையைப் பாதுகாப்பதற்கு ஈரநிலங்களைப் பாதுகாப்பது அவசியமாகும். ஈரநிலங்களைச் சரியான முறையில் பயன்படுத்துவதன் ஊடாக அவற்றைப் பாதுகாக்க முடியும். இரசாயனப் பசளைகளைக் குறைவாகப் பயன்படுத்துதல், திட்டமிட்ட வகையில் நிர்மாணப்பணிகளை மேற்கொள்ளல், நீர்மூலங்களில் கழிவுகளைக் கொட்டுவதனைத் தவிர்த்தல் போன்ற பல்வேறு செயற்பாடுகளினூடாக ஈரநிலங்களைப் பாதுகாக்க முடியும். அத்துடன் ஈரநிலங்களின் முக்கியத்துவம் பற்றி மக்களிடையே எடுத்துக்கூறி விழிப்புணர்வை ஏற்படுத்துதல், முருகைக்கல் அகழ்தல் மற்றும் கண்டல் தாவர அழிப்பு போன்றவற்றை தடை செய்தல், பாடசாலை மட்டத்திலும் பல்கலைக்கழக மட்டத்திலும் ஈரநிலங்கள் தொடர்பான கருத்தரங்குகள்., விவாதங்களை நடத்துதல், ஈரநிலங்களைப் பாதுகாப்பதற்கென அர்சாங்கம் மானிய உதவிகளை வழங்குதல், கரையோர மணல் அகழ்வு நடவடிக்கைகளை தடை செய்தல் போன்ற பல்வேறுபட்ட நடவடிக்கைகளினாலும் ஈரநிலங்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களை குறைக்கலாம். அல்லது தவிர்க்கலாம். இவற்றைத் தவிர இன்று ஈரநிலங்களைப் பாதுகாக்கும் நோக்கில் சர்வதேச நாடுகளில் உச்சிமகாநாடுகளும் இடம்பெற்று வருகின்றன. குறிப்பாக ரம்சார் **(Ramzar)** உடன்படிக்கையைச் குறிப்பிடலாம்.

## பாடசாலை மாண...

வர்களிடையே கொரோனா தொற்றுக்கு இலக்காகியுள்ளவர்களை அடையாளம் கண்டுகொள்வதற்காக இந்த பரிசோதனை நடத்தப்படவுள்ளதாகவும் இன்று தொடக்கம் அப் பரிசோதனைகள் தொடர்ச்சியாக நடத்தப்படும் எனவும் அவர் கூறினார். (ம-3)

## தடுப்பூசியை...

கடந்து விட்டன. காய்ச்சல், தலையிடி ஏதும் எனக்கு ஏற்படவில்லை.

ஊசி ஏற்றிய பகுதியில் சிறிய வீக்கம் ஏற்பட்டதை தவிர வேறு ஒன்றுமில்லை எனத் தெரிவித்துள்ள யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தயக்கமின்றிப் பொதுமக்கள் தடுப்பூசி ஏற்றிக் கொள்ளுங்கள் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தடுப்பூசி போட்ட சிலருக்கு காய்ச்சல் வந்ததாக அறிகின்றேன். சிறிய குழந்தைகளுக்கு ஏனைய தடுப்பூசிபோடுகின்றபோது இவ்வாறு காய்ச்சல் ஏற்படுவது வழமை. ஆகவே, இதை சாதாரணமாகவே எடுத்துக் கொள்ள வேண்டும்.

விரைவில் உங்களுக்கும் தடுப்பூசி ஏற்றும் சந்தர்ப்பம் வருகின்றபோது தயக்கமின்றி தடுப்பூசியைப் போட்டுக் கொள்ளுங்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-3,18)

இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

காய்ச்சல், தலைவலி போன்றவை பொதுவாக தடுப்பூசி ஏற்றல்களின்போது ஏற்படக்கூடிய சில பக்க விளைவுகளைத் தவிர பாரதூரமான பிரச்சினைகள் எதுவும் பதிவாகவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே பொதுமக்கள் தடுப்பூசி தொடர்பில் அச்சம் கொள்ள வேண்டிய அவசியமில்லை என அவர் வலியுறுத்தியுள்ளார். (ம-3)

## கொரோனா...

கொண்ட சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஹேமந்த ஹேரத்

## சோதிநாதனின்...

அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் நேற்றுத் திங்கட்கிழமை காலை வேலணை பிரதேச செயலக வாயிலை மூடி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டவர்களுடன் பிரதேச செயலகத்தின் அதிகாரியொருவர் நடத்திய பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து குறித்த போராட்டம் கைவிடப்பட்டது.

அதனைத் தொடர்ந்து யாழ். மாவட்டச் செயலகம் முன்பாகவும் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடச் சென்ற பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்களின் ஐந்து பேர் கொண்ட பிரதிநிதிகளை யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசனிடம் பொலிஸ் அதிகாரிகள் அழைத்துச் சென்றனர். அதனைத் தொடர்ந்து கலந்துரையாடலும் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் குறித்த விவகாரம் தொடர்பில் எதிர்வரும் நான்கு நாட்களில் தீர்வு வழங்குவதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் தமக்கு உறுதியளித்துள்ளதாக கலந்துரையாடலில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர்.

கலந்துரையாடலைத் தொடர்ந்து வேலணைப் பிரதேச செயலாளராகவிருந்த எஸ்.சோதிநாதனின் இடமாற்றத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து தீவகத்திலுள்ள 52 பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளின் கையெழுத்துக்களுடன்கூடிய மகஜரும் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டது. (ம-3,18)

## 7,221...

யாளர்கள் உள்ளிட்ட சுகாதாரத் துறையினருக்கு கோவிட் - 19 தடுப்பூசி மருந்து வழங்கும் நடவடிக்கையில் நேற்றைய மூன்றாம் நாளில் 2 ஆயிரத்து 694 பேர் டோஸ் பெற்றுள்ளனர் என வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

கடந்த மூன்று நாட்களில் வடக்கு மாகாணத்தில் 7 ஆயிரத்து 221 மருத்துவ சேவையாளர்கள் மற்றும் சுகாதாரத் துறையினர் கோவிட் - 19 தடுப்பூசியைப் பெற்றுள்ளனர்.

இது மொத்த உத்தியோகத்தர்கள் எண்ணிக்கையில் 73 சதவீதமாகும் என்றும் அவர் சுட்டிக் காட்டினார். (ம-3)

## கிழக்கு முனையம்...

கீழ்வரும் அமைச்சரவை பத்திரத்திற்கு அமைச்சரவை அனுமதி வழங்கி யுள்ளதாக துறைமுக அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

கடந்த 2019ஆம் ஆண்டு மே மாதம் இந்தியா, இலங்கை மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு இடையில் முத்தரப்பு புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று இலங்கையின் கொழும்பு துறைமுக கிழக்கு முனையம் குறித்து கைச்சாத்திடப் பட்டிருந்தது. (ம-3)

## எரிவாயு விலை...

எரிவாயு விலையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாக பிரதான எரிவாயு நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

நேற்று முதலாம் திகதி முதல் சர்வதேச சந்தையில் ஒரு டன் எரிவாயு விலை 605 அமெரிக்க டொலர் வரை அதிகரித்துள்ளதாக குறித்த நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

அதற்கமைய குறைந்தபட்சம் 12.5 கிலோ சிலிண்டர் ஒன்றை வழங்குவதற்கு 1900 ரூபாய் அறவிட வேண்டும் என நிறுவனங்கள் குறிப்பிட்டுள்ளன.

அதற்கான யோசனையை அரசாங்கத்திற்கு முன்வைத்துள்ளதாக குறித்த நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. (ம-3)

## கிழக்கு முனை...

முனையம் தொடர்பில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் இலங்கை செயற்படுமென எதிர்பார்ப்பதாக இந்தியா தெரிவித்துள்ளது.

கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தினால் வெளியிடப்பட்டுள்ள விசேட ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு பல்வேறு சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தப்பட்டதாகவும் நாட்டின் தலைமை அதுதொடர்பில் அறிவித்திருந்ததாகவும் குறித்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

வெளிநாட்டு முதலீட்டாளர்களுடன் இணைந்து இதனை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கையின் அமைச்சரவை கடந்த 3 மாதங்களுக்கு முன்னர் தீர்மானித்திருந்ததாகவும் அதில் கூறப்பட்டுள்ளது. (ம-3)

## யாழ்...

வடமாகாணத்தில் ஏழு பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் ஐவர் உட்பட யாழ். மாவட்டத்தில் ஆறு பேருக்கும் வவுனியாவில் ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-3,18)

## வட -...

வட-கிழக்கில் விஸ்வரூபம் எடுத்து வரும் அரசின் திட்டமிட்ட ஆக்கிரமிப்பு மற்றும் அடக்குமுறைகளுக்கு எதிராகப் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை நாளை 03ஆம் திகதி முதல் 06 ஆம் திகதி வரை வடக்கு - கிழக்குத் தழுவிய ரீதியில் முன்னெடுக்கப்படவுள்ள அஹிம்சை ரீதியிலான போராட்டம் தொடர்பான வடமாகாணத்துக்கான ஆலோசனைக் கலந்துரையாடல் நேற்றுத் திங்கட்கிழமை நண்பகல் 12 மணி முதல் யாழ். மத்திய கல்லூரிக்கு அருகில் அமைந்துள்ள தந்தை செல்வா கலையரங்க மண்டபத்தில் இடம் பெற்றது.

யாழ்ப்பாணம் சிவகுரு ஆதீன பீடாதிபதி தவத்திரு வேலன் சுவாமிகள் தலைமையில் இடம்பெற்ற மேற்படி கலந்துரையாடலில் இந்து, கிறிஸ்தவ மதகுருமார்கள், தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகள், உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள் வடக்கு - கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிவில் - சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

சுமார் இரண்டு மணித்தியாலங்கள் இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலில் மேற்படி அஹிம்சை ரீதியிலான போராட்டத்தை எவ்வாறு ஒருங்கிணைத்து நடத்துவது? என்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன் போராட்டத்தை நடத்துவதற்கு வடக்கு - கிழக்கின் எட்டு மாவட்டங்களிலும் குழுக்களை அமைத்துப் போராட்டத்தை நெறிப்படுத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. அத்துடன் வடக்கின் சில மாவட்டங்களுக்கான குழுக்கள் உடனடியாகத் தெரிவும் செய்யப்பட்டது. (ம-3,18,33)

## கொரோனாவால்...

அறிவித்துள்ளது.

இதனால்இதுவரையில்கொரோனாத்தொற்றினால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 323 ஆக அதிகரித்துள்ளது.

நாட்டில்நேற்றும்+826 பேர்கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர். (ம-3)

### வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 1661 திகதி 2021.02.01

ஆங்கில எழுத்து Y — வெற்றி இலக்கங்கள் 05 18 27 62

### மெகா பவர்

திகதி 01/02/2021 சீட்டிழுப்பு இலக்கம் 0752

Z 07 — 04 41 42 54

### மஹஜன சம்பத

திகதி 2021/02/01 சீட்டிழுப்பு இலக்கம் 4385

N 3 6 8 4 5 2

### கொவிசெத

சீட்டிழுப்பு திகதி 01.02.2021 சீட்டிழுப்பு இலக்கம் 2680

ஆங்கில எழுத்து D — வெற்றி இலக்கங்கள் 01 16 49 53

### தன நிதானய

திகதி - 2021.02.01 சீட்டிழுப்பு இலக்கம் - 422

L — 11 23 27 80

### அத கோடிபதி

கிழமை: திங்கள் சீட்டிழுப்பு இல: 1181 வர்ணம்: சிவப்பு சீட்டிழுப்பு திகதி: 01.02.2021

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 104,170,155

வெற்றி இலக்கங்கள் 10 25 42 61 — ஆங்கில எழுத்து G

### சனிதா

கிழமை: திங்கள் சீட்டிழுப்பு இல: 3511 வர்ணம்: கரும் நீலம் சீட்டிழுப்பு திகதி: 01.02.2021

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 30,621,564

வெற்றி இலக்கங்கள் 07 10 30 37 — R

### ஷசி

சுப்பர் ஜக்பொட் 2,383,366/=

திகதி: 01.02.2021 வெற்றி வாரம்: 3062 வர்ணம்: மஞ்சள்

வெற்றி இலக்கங்கள் 05 19 52 59 — மகரம்

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,552,100

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 1355 நிறம் ஊதா சீட்டிழுப்பு திகதி 01/02/2021 தினம் திங்கள்

அடுத்த சுப்பர் ஜக்பொட் 66,402,288/=

வெற்றி எழுத்தும் இலக்கங்களும் Z 10 23 54 55

### ஜயோதா Jayoda

சீட்டிழுப்பு வாரம் 1729 சீட்டிழுப்பு திகதி 01.02.2021

வெற்றி இலக்கங்கள் 05 14 41 64 — ஆங்கில எழுத்து F


எதிர்வரும் சுப்பர் பரிசுப்பெறுமதி ரூ. 21,154,600

தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-1000/=Kg
பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் / நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg
எமது நேரடிக்கிளைகள்
• யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய்
• நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய்
• புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி
• பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி
(C-1167)
0768226240 DHL

சாரதி தேவை
நெல் வெட்டும் இயந்திரத்திற்கு சாரதி தேவை.
(C-1321)
077 023 7391

# மரண அறிவித்தல்



## சிதம்பரப்பிள்ளை சண்முகலிங்கம்

கற்கோவளத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை சண்முகலிங்கம் நேற்று (01.02.2021) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - காளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பாக்கியலட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான வள்ளியம்மை, தங்கவடிவேல், வைத்திலிங்கம் மற்றும் இரத்தினசோதி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் கண்ணன், ரயனி, உதயனன் ஆகியோரின் அன்புத் தந்தையும் வஸ்தலா, குணதாஸ், வளர்பிறை ஆகியோரின் மாமனாரும் சினேகா, அனுசா, அபர்னா, நிலாஜினி, நிலக்சன், நிவித், அஸ்வின், அஸ்வினி, அச்சுதன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பிற்பகல் 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோரியடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C-1329)

கற்கோவளம்,
பருத்தித்துறை.

தகவல்:-
குடும்பத்தினர்

# எட்டாம் ஆண்டில் தொடரும்

உன் நினைவுகளுடன்...



பிறப்பு
05.10.1975

இறப்பு
02.02.2013

## அமரர் தி. சசீந்தினி

காலங்கள் உருண்டோடினாலும்
கலைந்திடாது என்றும் உன் நினைவுகள்
தேனூறும் உன் பேச்சில்
தெவிட்டாது திழைத்திருந்தோம்!
பாசத்தோடு நீ பேசிய வார்த்தைகளோ...
பசுமையாய் இன்னும் எம் இதயங்களில்!
முறுவல் பூத்த கண்கள் எங்கே?
மோதிச் சிரித்த வதனம் எங்கே?
நேசமுடன் நினைவுகளதுவாகி...
சோகம் மறைத்து சுமந்து நிற்கின்றோம்.
தேசம் விட்டு உனைப் பிரிந்தே
காலதூதனனுப்பி உனை அழைத்த
ஈசனையே வேண்டுகின்றோம்...
காலமெல்லாம் உன் ஆத்மா
அவனடியில் சாந்திபெற வேண்டுமென்றே...
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

புளியங்கூடல் வடக்கு,
ஊர்காவற்றுறை.

(5499)

மு. திருநாவுக்கரசு
குடும்பத்தினர்

# முதலாம் ஆண்டு நினைவுப் பிரார்த்தனை அழைப்பு



கடந்த 15.01.2020 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்பக் குலவிளக்கு

## அமரர் சுபத்திராதேவி தணிகாசலம்பிள்ளை

பிரிவிதுவோ தூரமில்லை

எண்ணத்தில் தூய்மை எடுத்தசெயல் யாவினிலும்
வண்ணம் செறிந்திருக்கும் வகைதேர்ந்த நல்வாழ்வு
திக்கலைந்து சோர்ந்து திருகோணமலை நகரில்
பக்கத்தொருங்கு வந்து பழகியநாள் மறப்பதுண்டோ
தணிகாசலம் பிள்ளைகல்வித் தகைமையுளன் அவருறவாய்
அணியான துணை சுபத்ரா ஆலயமாம் வீடுசெல்வம்
நேயமிகு அன்னையவர் பாசமிகும் மக்கள்கல்வி
தூயதுணை நம்குடும்பம் தொடரநட்புத் துலங்கியது.
தேவை அறிந்துதவும் தீங்கறியா வெள்ளைமனம்.
சேவையவர் செய்கைகளால் சீர்பெறவே வாழ்ந்த சொந்தம்
பயன்கருதா நல்உதவி பகிர்ந்தளிக்கும் நல்லபண்பு
உரிமையொடு யாவரையும் உபசரிக்கும் உயர்ந்தகுணம்
பரிவோடு எமைநோக்கும் பார்வைஒன்றே கோடிபெறும்
குடும்பக் குலவிளக்காய் குறைவில்லா வாழ்வு கண்டீர்
பாசமுடன் நல்மொழிகள் படரப் பலகதைகள்
பேசியதை யாம்மறவோம் பிரிவிதுவோ தூரமில்லை
விரைவினிலே நாமும் விதித்த விதிக்கமைவாக
உரித்தாம் நிரந்தரத்தில் உமைக்காணல் சத்தியமே!
உடல்கொண்டு நாமுலவும் உண்மையிது பொய்யாகிக்
கடந்தாலும் நல்வாழ்வில் களித்தபுகழ் வாழ்ந்திருக்கும்.
ஆத்ம சாந்திக்காய் அனுதினமும் வேண்டுகிறோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அவர்களின் சிவபதப்பேறு குறித்த முதலாம் ஆண்டு நினைவு ஆத்மசாந்திப் பிரார்த்தனை நாளை (03.02.2021) புதன்கிழமை (ஆண்டுத்திதி) காலை 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் வருகைதந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் சுகாதார முறைப்படி கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

பூவுலகில்
09.01.1945

இறையுலகில்
15.01.2020

"சுபஸ்தான்"
இல. 672 (1036), காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

(C-1328)

குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.02.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.